உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI





| மலர் 17 | ஜய ஐப்பசி - மார்கழி | 2014 - Oct - Dec | இதழ் 10-11-12 |
|---|---|---|---|




## சிட்னி முருகன் சைவநெறி மாநாட்டுச் சிறப்பிதழ்

ரூபா. 50/-

# சிட்னி முருகன் சைவநெறி மாநாட்டு நிகழ்வுகள்



உ
சிவமயம்

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவநீதி



மலர் 17 விஜய ஐப்பசி, கார்த்திகை, மார்கழி    சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 7,8,9

**தொடக்குனர் :**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்
**திரு. செ. நவநீதகுமார்**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
- கொழும்பு

No. 4A, 1St Lane,
Ratmalana.
Tel : 077 9008286

## சிட்னி முருகன் சைவநெறி மாநாடு

அவுஸ்திரேலிய சைவமன்றமும் உலக சைவப் பேரவையும் இணைந்து நடத்திய சிட்னி முருகன் சைவநெறி மாநாடு 2014 ஆகஸ்ற் 29, 30, 31 ஆம் திகதிகளில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சைவாகமங்கள், சைவத்திருமுறைகள், சித்தாந்தநூல்கள் காட்டும் மனித நேயம் எனும் கருப்பொருளில் நடை பெற்ற இம்மாநாட்டில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா முதலிய பல நாடுகளில் இருந்து பேராளர்களும் அறிஞர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

இலங்கையிலிருந்து நல்லையாதீன குருமகா சந்நிதானம் அவர்களின் தலைமையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன், முன்னாள் இசைத்துறைத் தலைவர் பேராசிரியர் பண்ணிசைவேந்தர் நா.வி.மு.நவரத்தினம், திருவாவடு துறை ஆதீன சைவசித்தாந்தக் கொழுப்புப் பயிற்சிமைய இயக்குநர் சைவப்புலவர் செ.நவநீதகுமார், சித்தாந்த ரத்தினம் வே.கனகசபாபதி ஆகியோர் சென்று பங்கு பற்றினர்.

மாயாவாதமும், லோகாயதமும் மேலோங்கி வரும் இக்காலகட்டத்தில் இந்த மாநாடு சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை முன்னிறுத்தி நடத்தப் பட்டமை போற்றுதலுக்குரியது.

ஆகமங்கள், திருமுறைகள், சைவசித்தாந்தம், புராணங்கள், சமயம் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள், புராணபடனம், பண்ணிசை ஆகிய துறைகளில் ஆய்வரங்குகளும், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், செய்முறை விளக்கங்களும் நிகழ்த்தப் பெற்றமையும் இவற்றைப் பதிவு செய்யும் வகையில் சிட்னி முருகன் சைவமாநாட்டு மலரும் வெளியிடப் பட்டமையும், சைவசமய விழுமியங்களை உலகறியச் செய்யும் நன் முயற்சியாகும்.

எங்கள் சமயம் சைவசமயம் என்பதனையும் முழுமுதற்கடவுள் சிவபெரு மானே என்பததையும், சிவபெருமான் திருவடிகளைச் சேர்தலே முத்தி யின்பம் என்பதையும் அதுவே சைவவாழ்வின் நோக்கமும் பயனும் என்பதையும் உலகுக்குணர்த்திய இம்மாநாட்டின் அமைப்பாளர்களையும் போற்றுகின்றோம். இந்தச் சைவநீதியை சிட்னி முருகன் சைவநெறி மாநாட்டுச் சிறப்பு மலராக வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கின்றோம்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | ஆசிரியர் எண்ணம் | 01 |
| 02 | திருவடி வழிபாடு | 03 |
| 03 | வாழ்த்துச் செய்தி | 04 |
| 04 | வாழ்த்துச் செய்தி | 06 |
| 05 | சைவநெறி மாநாடு 2014 - ஒரு பார்வை | 08 |
| 06 | சிட்னி முருகன் சைவநெறி மகாநாட்டுப் பயணம் | 13 |
| 07 | சம்பந்தரின் சித்திரக் கவிகள் | 18 |
| 08 | SAIVA RELIGION | 22 |
| 09 | தீக்ஷை | 23 |
| 10 | சமய இலக்கியங்கள் வினாடிவினா (மாணவர் கல்வி) | 28 |
| 11 | இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை | 30 |
| 12 | சுந்தர மூர்த்தி நாயனார் புராணம் | 32 |
| 13 | சேர் பொன்னம்பலம் இராமநாதனின் சமயப் பணிகள் | 34 |
| 14 | வாரியாரின் ஒரு வரிப் பதில் | 37 |
| 15 | நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள் | 38 |
| 16 | உங்களுக்குத் தெரியுமா! | 40 |



**திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன 23ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாசிய சுவாமிகளின் இரண்டாவது குருபூசை தினத்தின் நினைவான (மார்கழிச் சதயம் 27.12.2014)**

# திருவடி வழிபாடு

**சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்**
**கிருஷ்ணானந்தி இராஜேந்திரன்**

விக்கிரம சிங்கபுரத்தில் சிவசுப்பிர மணியனென
அவதாரம் செய்த அருட்குருவே போற்றி.

மெய்கண்ட சந்தானத்தில்வந்த குருநமச்சிவாய மூர்த்தியைக்
குருவாகக் கொண்ட எங்கள் குருவே போற்றி

சிவஞான உபதேச அபிஷேக பரம்பரையில்
சிவப்பிரகாச மூர்த்தியெனத் தீட்சாநாமம் கொண்டகுருவே போற்றி

திருவருளைப் பெருக்கும் திருவாவடுதுறை ஆதீனத்தில்
ஒருதலைமுறைகாலம் அருளாட்சி செய்த குருவே போற்றி

ஸ்ரீலஸ்ரீ என்பதைச் சீர்வளர்சீர் எனச் செந்தமிழாக்கிய
சீர்வளர்சீர் சிவப்பிரகாச ஞானகுருவே போற்றி

தானமும் தவமும் மிக்கவராய் அன்னதானப்பிரபுவாய் விளங்கிய
காட்சிக்கு எளிய காருண்ய மூர்த்தியே போற்றி

மெய்கண்டார் ஞானத்தமிழ் இதழை மேதினிக்குந்தந்த
மெய்ஞ்ஞான குருவே போற்றி

மெய்கண்ட சாத்திரங்களையும் சைவத்திருமுறைகளையும்
சித்தாந்தப் பயிற்சி மையங்கள் மூலம் பரவச் செய்த குருவே போற்றி

ஈழத்திற்கு எழுந்தருளி வந்து சித்தாந்தப்பயிற்சிமையத்தைத்
தொடக்கி வைத்து எமக்கருள்புரிந்த குருவே போற்றி

பண்டார சாத்திரங்கள் பதினான்கையும் பரவச்செய்த
பரமாசாரிய ஞானகுருவே போற்றி

சரஸ்வதி மகாலிலுள்ள ஓலைச்சுவடிகளை மறுவடிவம்
செய்துவைத்த மகாஞானகுருவே போற்றி

மகரத்தலைநாளில் சிவத்திருவடிவம் காட்டி எங்கள்
மனத்தில் குடிகொண்ட மாபெருஞானகுருவே போற்றி

சயியாதி மரபுதழைக்கச் சித்தாந்த சுத்தாத்துவித முத்திபெற்றுச்
சிவலிங்க வடிவாய்த் திவ்யதரிசனம் தரும் குருவே போற்றி.

சைவ மன்றம்
சிட்னி முருகன் கோவில்
தமிழ் கல்வி கலாசார நிலையம்

The Saiva Manram
217 Great Western Highway
May Hill, NSW 2145
Telephone: (02) 9687 1695
Fax: (02) 9687 8907

# வாழ்த்துச் செய்தி



கொழும்பில் இருந்து வெளிவரும் சைவ நீதி காலாண்டு சஞ்சிகை சிட்னியில் இடம் பெற்ற சிட்னி முருகன் சைவ நெறி மாகாநாட்டுக்கொன சிறப்புப் பதிப்பு ஒன்றினை வெளியிட முன்வந்துள்ளமை மகிழச்சி தரும் செய்தியாகும்.

சைவ மன்றம் முருகனை முதன்மைத் தெய்வமாகக் கொண்டுள்ள சிட்னி முருகன் ஆலயத்தினை அமைத்து நிர்வகித்து வருவதுடன் தமிழ் மொழியினையையும் சைவ நெறியினையும் அவுஸ்திரேலியா வாழ் சைவர்கள் மத்தியில் பேணிப் பாதுகாத்து அதனை அவர்களது நாளந்த நடைமுறையில் கடைப்பிடிக்க வகை செய்யும் சகல வழிமுறைகளையும் கடந்து மூன்று தசாப்தங்களாக மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு படியாகவே 2014 ம் ஆண்டில் சிட்னி முருகன் சைவ நெறி மகாநாடு இடம் பெற்றுள்ளது.

சைவ மன்றம் உலக சைவப்பேரவையின் வேண்டுதலின்படி 2006 ம் ஆண்டில் உலக சைவ மகாநாட்டினைச் சிட்னியில் நாடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அம் மாகாநாட்டின் மூலம் உணரப்பட்ட பலன்கள் மீண்டும் ஒரு மாநாட்டினை சிட்னில் நடாத்த வேண்டும் என்ற உந்துகையை ஏற்படுத்தியது. அதன் பிரதிபலிப்பே இவ் ஆண்டு இடம் பெற்ற சிட்னி முருகன் சைவ நெறி மாகாநாடு.

இம் மகாநாட்டுக்கு உலக அளவில் கிடைக்கப் பெற்ற ஆதரவு எமக்கு பிரமிப்பினையும் மட்டற்ற மகிழச்சியையும் தந்துள்ளது. இம் மகாநாட்டுக்கு கட்டுரைகள் வழங்கியும், பயில் அரங்கங்கள் நடாத்தியும் சிறப்புச் சொற்பொழிவாளர்களாகவும் இந்தியா, இலங்கை, மலேசியா, மொறிசியஸ் அகிய நாடுகளில் இருந்து அறிஞர்களும் துறைசார் வல்லுணர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

புலம் பெயர்ந்து சைவத் தமிழர்கள் வாழந்தாலும் அவர்கள் தாயகத்தில் இருந்து கட்டிச் சுமந்து வந்த சைவ நெறியையும், சைவ கலாசாரத்தினையும் பாதுகாத்து வருவதுடன் அவ் அறிவினை மேலும் மேம் படுத்த முனைகின்றார்கள் என்பதற்கு இவ் மகாநாடு சான்றாக அமையும் என்பதில் எதவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

சிட்னி முருகன் ஆலயம் துன்பத்தின் எல்லையில் வாழும் எம் தாயக மக்களையும் நினைவில் வைத்து அவர்கள் மறுவாழ்வுக்கான அறப்பணிகளையும் ஆண்டு தோறும் செய்து வருவதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். வட கிழக்கு மாகாணங்களில் இயங்கிவரும் அறப்பணி நிறுவனங்கள் மூலம் இப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிறைவாக இம் மாகாநாடு சிறப்பாக, வருகை தந்தவர்கள், இணையங்கள் வாயிலாக பார்த்தும் கேட்டும் கலந்து கொண்ட அனைவரும் வியக்கும் வண்ணம், போற்றும் வண்ணம் சிறப்பாக நடைபெற பின்புலத்தில் இருந்து உழைத்த அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சைவ நீதி இதழின் சைவப் பணி மேலோங்கவும் சிட்னி முருகன் சைவ நெறி மாகநாட்டுச் சிறப்பு இதழ் வெற்றி கரமானதாக அமையவும் சிட்னி முருகன் துணை செய்வான் என்று கூறி வாழ்த்தி வணங்குகின்றேன்

நன்றி
வீரசிங்கம் குணரஞ்சிதன்
தலைவர்
15 ஒக்ரோபர் 2014

## அட்டவீரட்டத்தலங்கள்

### சிவபெருமான் எட்டு வீரத்திருவிளையாடல்களை நிகழ்த்திய இடங்கள்

1. திருக்குறுக்கை - காமதகனம் செய்தல்
2. திருக்கண்டியூர் - பிரமன்தலை கொய்தல்
3. திருக்கடவூர் - காலனை உதைத்தல்
4. திருக்கோவலூர் - அந்தகாசுரனை வதம்செய்தல்
5. திருப்பறியலூர் - தக்கன் தலை கொய்தல்
6. திருவிற்குடி - சலந்தராசுரனை வதம்செய்தல்
7. திருவதிகை - முப்புரம் எரித்தல்
8. திருவழுவூர் - மதயானையை உரித்தல்

# வாழ்த்துச் செய்தி

அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்ற சிட்னி முருகன் 'சைவ நெறி மாநாடு - 2014' நிகழ்வுகளின் பதிவுகளை தாங்கி ஒரு சிறப்பு மலராக 'சைவ நீதி' வெளிவர இருப்பதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இம் மாநாடு, நான் சைவ மன்றத்தின் தலைவராக இருந்த போது இடம்பெற்றது என்பதனை யிட்டு ஒரு ஆன்மீக திருப்தியும் இப்படி ஒரு மாநாட்டை நடத்தி முடித்துள்ளோம் எனும் மன மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

சைவ மன்றமும் உலக சைவப் பேரவையின் அவுஸ்திரேலியா கிளையும் இணைந்து மாநாட்டை நடத்தி இருந்தனர். இந்த சைவ நெறி மாநாடு முதன் முதலாக தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு மேலும் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்ததுடன் அனைத்துலக ரீதியில் பெரு வரவேற்பினையும் பெற்றிருந்தது.

இம் மாநாடு இடம்பெற்ற சிட்னி முருகன் ஆலய வளாகம் இந்திர விழா கோலம் பூண்டு இருந்ததனைப் போன்று காட்சி இருந்தது. நான்கு அரங்கங்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஆன்மீக சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

எங்கு பார்த்தாலும் ஓதுவார்களின் பண்ணிசை, சொற்பொழிவுகள், ஆகமங்கள், சைவ சித்தாந்தங்கள் தொடர்பான சிறப்பு உரைகள், யாழ்ப்பாணத்துக்கே உரிய பாரம்பரியமான புராணப் படிப்பும் பயன் சொல்லும் முறையும் அலங்கரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டுக்கு வருகை தந்து தரம்மிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்த வல்லுநர்கள், பேராசிரியர்கள், ஆசி உரையினை நேரில் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மேலும் மாநாட்டினை நெறிப்படுத்தி இரவு பகலாக உழைத்த மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு, அதன் உப குழுக்கள் மற்றும் அனுசரணை வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்கள் ஆகியோர் மாநாடு வெற்றிகரமாக நடைபெற உதவியவர்கள் ஆவர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, காலத்தால் அழியாத சிறப்பு மாநாட்டு மலர் வெளியிடப்பட்டமையும் பல வல்லுநர்களினதும் ஆராய்ச்சியாளர் களினதும் கட்டுரைகளை வகுத்து, தொகுத்து சிறந்த மாநாட்டு மலரை வெளியிட்டமையும் மாநாட்டின் தரத்தை அளக்கும் ஒரு அளவு கோளாக உள்ளது.

இம் மாநாடு சிட்னி வாழ் மக்களிடம் ஆன்மீக விழிப்புணர்ச்சியை குறிப்பாக இளையவர்களுக்கு பரந்த அளவில் ஏற்படுத்தி உள்ளது என்பது

பெருமைப்படக்கூடிய விடயம் ஆகும். இவ்வாறான மாநாடுகள் தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருள் ஆசிகள் கிடைக்க வேண்டியும் 'சைவ நீதி'யின் இப்படியான பணிகள் தொடரவும் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

**செ.தவபாலச்சந்திரன்**
**தலைவர் - சைவ மன்றம் (2013-2014)**

## திருமந்திர விளக்கம் தொடர்ச்சி

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

**நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே** (85)

**நான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக** – நான் இறைவனைப்பற்றி நினைந்து அடைந்த இன்பத்தை இவ்வுலகமும் பெறுவதாக.
**வான்பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்** - ஆகாயத்தை இடமாகக் கொண்ட அறிவு சொரூபமான சிவத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால்.
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்** - அது உடலைப் பற்றிய உணர்வாகவுள்ள மந்திரமாகும்.
**தான் பற்றப்பற்றத் தலைப்படும் தான்** - அவ்வுணர்வை அடிக்கடி முயன்று பற்றிக் கொண்டால் சிவம் வந்து உங்களிடம் தானே பொருந்திவிடும்.

புறத்தே உள்ள பொருள்களை விரும்பி அடைவதில் மகிழ்ச்சி உண்டாகின்றது. அதுபோல எங்கும் நிறைந்த இறைவனை மனத்தினால் இடைவிடாது சிந்திப்பதால் அவனிடம் சிவம் கலந்து விளங்கும் போது பேரின்பம் உண்டாகும். இதனை எல்லாரும் பெற வேண்டும்.

# சிட்னிமுருகன் ஆலயச் சைவமன்றத்தினரும் உலகச் சைவப்பேரவை அவுஸ்திரேலியாக் கிளையினரும் இணைந்து வழங்கிய சிட்னிமுருகன் சைவநெறி மாநாடு 2014 - ஒரு பார்வை

இணுவையூர். திருமதி. கார்த்தியாயினி கதிர்காமநாதன்.

"சிவபெருமான் தம்முடைய திருமுகங்கள் ஐந்தையும் மறைத்து ஒரு திருமுகத்தோடு எழுந்தருளியிருந்து தமது நெற்றிக்கண்ணிலிருந்து தோற்று வித்த அருவமாய் உருவமாய் அனாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற சோதிப்பிழம்பிலிருந்து ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்டு சரவணப்பொய்கையிலே உமையம்மை வாரியணைத்த போது மீண்டும் ஒருருவாகிக் கந்தனெனப் பெயர் பெறுகின்றார். அக்குழந்தையை உமையம்மை இறைவனிடங் கொண்டு செல்ல இறைவன் இடபவாகனத்தில் இடமருங்கு உமையவளும் இடையில் முருகனுமாக இருந்து சோமஸ்கந்த மூர்த்தியாகக் காட்சி கொடுத்தார்"

என்று கந்தபுராணம் கூறும் முருகனின் அவதாரச் சிறப்போடிணைந்த, வேறெந்த ஆலயங்களிலும் காணமுடியாத சிறப்பு மிக்க, சோமஸ்கந்த வடிவத்தையே மூலாதாரமாகக் கொண்ட அவுஸ்திரேலியா நாட்டின், சிட்னி மாநகரில், வைகாசிக்குன்றில் அமைந்துள்ள அருள்மிகு சிட்னிமுருகன் ஆலயமும் ஆலயவளாகமும் திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணித்திங்கள் 13, 14, 15, (29.8.14, 30.8.14, 31.8.14) வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் விழாக்கோலம் பூண்டிருந்தது. சிட்னிமுருகன் ஆலயத்தின் தெற்கு வீதியில் பிரமாண்டமான பந்தர் எழுப்பிப் பூரணகும்பம் குத்து விளக்குகளுடன் வாழைக்குலைகளும், தோரணங்களும், பூச்செண்டுகளு மாகத் திருமணக் கோலம் கொண்ட இல்லம் போல மிக அழகாகக் காட்சியளித்தது சிட்னிமுருகன் ஆலயவளாகம். புலம்பெயர்ந்த நாடொன்றில் இருக்கின்றோமா? இல்லை யாழ்ப்பாணத்தில் இருக்கின்றோமா? என்று மனம் மயங்கிக் குதூகலித்துப் பொங்கி வழிந்தது.

சிட்னிமுருகன் சைவநெறி மாநாடு 2014 என்ற அழகிய வாசகத்துடன் சிட்னிமுருகன், நடராஜர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் திருவுருவங்களும் பொறிக்கப்பெற்றுப் பந்தரும், மண்டபங் களும் தெய்வீகமணத்தைப் பரப்பியபடி இருந்தன. முதலாவது நாளாகிய வெள்ளிக்கிழமை 29.8.2014 அன்று மாலை 3.45 மணிக்குச் சிட்னிமுருகன் ஆலயத்தில் விசேட பூசைகள், வழிபாடுகள், கூட்டுப்பிரார்த்தனை (திருமுறை பாராயணம்) ஆகியவை இடம்பெற்றுச் சிட்னிமுருகன், நடராஜர், நாயன்மார்களின் திருவுருவப்படங்கள் வீதியுலாக்கொண்டு வரப்பட்டு ஆலயமுன்றலில் நந்திக்கொடி ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம், இலங்கை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், தமிழ்நாடு, இந்தியா, தர்மபுர ஆதீனம் மௌனகுரு கலாநிதி குமாரசாமித்தம்பிரான் ஆகியோரின் ஆசிகளுடன் சைவத் தமிழ் பாரம்பரிய முறைகளுடன் வரவேற்புபசார விழா வைபவங்கள் இடம் பெற்றன. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவியழைக்க வேண்டுமா என்ன? அறிவுத் தேடலுள்ளவர்கள், ஆன்மீகத் தேடலுள்ளவர்கள் அமைதியைத்

தேடுபவர்கள் எனச் சிட்னிமுருகன் ஆலயவளாகம் மக்களைத் தன்னகத்தே ஈர்க்க ஆரம்பித்திருந்தது. இலங்கை, இந்தியா, மலேசியா, கனடா, இலண்டன், மொரீசியர்ஸ், ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்திருந்த சைவத்தமிழ் அறிஞர்களோடு அவுஸ்திரேலியா வாழ் சைவத்தமிழ் அறிஞர்களும் கூடியிருந்த காட்சி அன்னிய நாடொன்றில், அன்னிய கலாசாரத்தின் மத்தியில் வாழ்கின்றோம் என்கின்ற நினைப்பையே மறக்க அடித்துவிட்டது.

மாநாட்டின் இரண்டாம் நாளாகிய 30.8.2014 சனிக்கிழமை காலை 8.30 மணிக்குச் சிட்னிமுருகன் ஆலய ஆஸ்தான வித்வான்கள் மங்கள வாத்தியங்கள் (தவில், நாதஸ்வரம்) இசைக்க, ஓதுவார் மூர்த்தி அரிகர தேசிகர் அவர்கள் திருமுறைப்பண் பாட, தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண் ஆகியவற்றைச் சிட்னிமுருகன் ஆலயக் கூட்டுப்பிரார்த்தனைக் குழுவின் மாணவிகள் பாட, நல்லையாதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தருமபுரம் ஆதீன மூத்ததம்பிரான் முனைவர் குமாரசுவாமித்தம்பிரான் ஆகியோர் ஆசியுரைகள் வழங்க, மாநாட்டின் தொடக்க விழா மிகக் கோலாகலமாக ஆரம்பமாகியது. இம்மாநாட்டின் ஆரம்ப உரையை Mr. Tony Issa MP representing the Premier of NSW, Julie Owens, Federal MP for Parramatta, அவர்கள் ஆற்றினார். Councillor Nasr Kafrouni, Holroyd City Council Mayor, Dr. S. P Sabharathnam Sivachariar (Topic: Saivam - An ancient universal spiritual movement), Dr Suresh Kumar Govind (Topic: Saiva Principle - Love is God) ஆகியோரின் சிறப்புரையுடனும் மாநாட்டு மலர் வெளியீட்டுடனும் தொடக்கவிழா இனிதே நிறைவுபெற்றது.

மாநாட்டின் பொது அரங்கம் சனிக்கிழமை 30.8.2014 காலை 10.45 மணிக்குச் சங்கீத கலாநிதி பேராசிரியர் மு. நவரட்ணம் (இலங்கை) அவர்களின் சிறப்புப் பண்ணிசை நிகழ்வுடன் ஆரம்பமாகி முனைவர் கோ. ப. நல்லசிவம் (இந்தியா) அவர்களின் "தமிழ் கூறும் சைவம்", முனைவர் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் (இந்தியா) அவர்களின் "அப்பர் ஒரு பன்முகப்பார்வை", திரு. செ. நவனீதகுமார் (இலங்கை) அவர்களின் "ஈழத்துக் கந்தபுராண கலாசாரம்" ஆகிய சிறப்புச் சொற்பொழிவுகளுடனும் Mr. Alan Croker (Australia) அவர்களின் (Arudhra Dharshan from a western view) விசேட விரிவுரையுடனும் நிறைவுற்றது.

மதிய இடைவேளையின் பின்னர் அங்கு வந்திருந்த சைவ ஆர்வலர்கள் அனைவரும் சம்பந்தர் எங்கே? அப்பர் எங்கே? சுந்தரர் எங்கே? மாணிக்கவாசகர் எங்கே? என்று தேடியபடி நடந்துகொண்டிருந்தனர். என்ன ஆச்சரியம்? அப்படியாயின் சிட்னிமுருகன் ஆலயத்திற்கு நாயன்மார்கள் புனர்ஜென்மம் எடுத்து வந்துள்ளனரா? ஆம் பன்னிரு திருமுறைகளின் வடிவமாக, வேதசாரங்களின் உணர்வு அலைகளாக, சைவநாற்பாதங்களின் வழிபாட்டு நெறிகளின் விளக்கங்களாக, தொண்டராக, அன்பின் வடிவங்களாக, பண்பின் சிகரங்களாக, மனிதநேயத்தின் தோற்றங்களாக அவர்களின் படைப்பிலக்கியங்களினூடே அவர்களின் வாழ்வியல் ஆதாரங்களினூடே அவர்களின் பெயர்தாங்கிய ஆய்வரங்கங்களில்

அறிஞர்களின் ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்டு உலாவந்து கொண்டு இருந்தனர்.

“காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்” இது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் வாக்கு நாடு நகரங்களில் உள்ள சிறப்பு, அங்கேயுள்ள உயர்குடிகளின் ஒழுக்கம் ஆகியவை, பழங்கள் உண்பதிலோ கனிதரும் மரங்கள் செடிகள் கொடிகள் வளர்வதிலேயோ தங்கவில்லை வாயிலிட்டு வயிற்றிலே தள்ளுகின்ற “பழங்கள்” என்ற வார்த்தையையே கம்பன் வெறுக்கின்றான். “கனிகள்” என்ற வார்த்தையையே அவன் உபயோகிக் கின்றான். கம்பன் வாயூறுகின்ற கனிகள் “செவிநுகர் கனிகள்”. செவியினால் நுகர்ந்து இருதயத்தில் இருத்துபவைகள் அந்தக் கனிகள். அந்தக் கனிதரும் மரங்கள் செடிகள் கொடிகள் வெகு நூதனமானவை. அங்கும் இங்கும் நடந்து திரிபவைகள். என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தனது இலக்கியவழியிற் கூறிய கூற்றினை நினைவிற்குக் கொண்டு வந்தன மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்வுகள்.

சம்பந்தர் அரங்கம் மாணவர்களுக்கான சிறப்பு அரங்கமாக தயார்ப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு கலாநிதி சுரேஸ்குமார் கோவிந்தன் (மலேசியா) அவர்களின் Discovering human values in our Saiva tradition and culture (A motivational speech) உரை இடம்பெற்றது. அப்பர் அரங்கத்தில் சைவநெறி என்றால் என்ன? அது வாழ்க்கைக்கு அவசியமானதா? அவசியம் எனில் அன்னிய நாட்டில் அன்னிய கலாசார சூழலில் வாழும் எமது குழந்தைகளுக்கு எவ்வாறு சைவநெறி முறை களைக் கற்பித்தல் வேண்டும்? இன்பவாழ்வு என்றால் என்ன? போன்ற ஆய்வுகள் இடம்பெற்றன. சுந்தரர் அரங்கத்தில் ஆகமங்களும், திருமுறை களும் பிறப்பு முதல் இறப்பு வரை மனிதவாழ்கையை வளப்படுத்த எவ்வாறு உதவுகின்றன? என்பது பற்றி நடைபெற்ற ஆய்வரங்கு விவாத அரங்காகவே மாறிவிட்டது. மாணிக்கவாசகர் அரங்கத்தில் சைவநெறி முறைகள், திருமுறைகள் பற்றி ஆங்கில மொழியில் ஆய்வுகள் இடம்பெற்றன. கற்றோர் அவையில் கூடியிருப்பதுவும் அவர்களின் உயர்ந்த கருத்துக்களைச் சிந்தனைகளைக் கதைகளைச் செவிமடுப்பதுவும் உடலையும், உள்ளத்தையும், உயிரையும் களிப்புறச் செய்து விடுகின்றன.

**“செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப்படும்”**

என்பது வள்ளுவர் வாக்கு. செவிக்கு மட்டுமல்ல கண்ணுக்கும், கருத்துக்கும் கூட வண்ணம் வண்ணமாக இனிய உணவுகள் படைக்கப்பட்டன. ஆம் மாலை 6.00 மணிக்குச் சிட்னிமுருகன் ஆலயக் கல்வி கலாசார மண்டபத்தில் சிட்னியிற் தமிழ், சமயம், இசை, நடனம் பயிலும் மாணவ, மாணவியர்களின் திறமைகளை வெளிக்கொணரும் ஆக்கங்களின் களமாகிய கலையரங்க நிகழ்வுகள் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்தன.

மாநாட்டின் மூன்றாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை 31.8.2014 அன்றைய பொது அரங்கம் காலை 8.30 மணிக்குச் சங்கீத கலாநிதி மு. நவரட்ணம் அவர்களின் (இலங்கை) பண்ணிசையுடன் ஆரம்பமாகி கலாநிதி. மு.

நவரட்ணம் அவர்களின் "பண்ணின் பெருமை", முனைவர் சபாரத்தினம் சிவாச்சாரியார் (இந்தியா) அவர்களின் "ஆகமங்கள் கூறும் குமரிக் கண்டமும் அறிவியற் செய்திகளும்" திருமதி. சசிரேகா பாலசுப்ரமணியன் அவர்களின் "தேவார இணையத்தள அறிமுகம்," ஓதுவார் மூர்த்தி அரிகர தேசிகர் அவர்களின் "திருமுறை ஓதாய் திருமுறையே தாய்," திரு. ஜனார்த்தனன் அவர்களின் (மலேசியா) "திருமூலர் கூறும் சிவயோகம்," கலாநிதி. மா. வேதநாதன் (இலங்கை) அவர்களின் "இறைவன் தந்த தத்துவம்" ஆகிய சிறப்புச் சொற்பொழிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. மதிய இடைவேளையின் பின்னர் நடைபெற்ற ஆய்வரங்கத்தில் சம்பந்தர் அரங்கத்தில் மாணவர்களின் ஆய்வுகளும், அப்பர் அரங்கத்தில் சைவசித்தாந்த ஆய்வுகளும், சுந்தரர் அரங்கத்தில் பன்னிரு திருமுறைகளிலுள்ள மனித நேயம் பற்றிய ஆய்வுகளும், மாணிக்கவாசகர் அரங்கத்தில் பன்னிரு திருமுறைகளின் பதிப்புப்பணிகள் பற்றிய ஆய்வுகளும் இடம்பெற்றன. அன்றைய இனிய மாலைப் பொழுதில் நல்லை ஆதீன, தருமபுர ஆதீன முதல்வர்கள் நிறைவுரைகள் வழங்க ஓதுவார் மூர்த்தி அரிகர தேசிகர் திருமுறை, திருப்புகழ், மங்களம் ஆகியவற்றைப் பாட விழா இனிதே மங்களமாக நிறைவடைந்து. அன்றைய இரவு இறுதிநாளுக்குரிய சிட்னி வாழ் மாணவர்களின் விசேட கலைநிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போலமைந்திருந்தது மாநாட்டுச் சிறப்பு மலரின் வெளியீடு. இந்த நூலில் இலங்கை, இந்தியா, மலேசியா, கனடா, இலண்டன், அமெரிக்கா, மொரீசியர்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்த தமிழ் பேசும் நல்லறிஞர்கள் மனங்களிலிருந்து முகிழ்த் தெழுந்த சிந்தனைகளும், கருத்துக்களும் எழுபத்தியெட்டு நறுமலர்களாக மலர்ந்து மணம் வீசுகின்றன.

**"மனிதர் காள்இங்கே வம்ஒன்று சொல்லுகிறேன்**
**கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லீரே**
**புனிதன் பொற்கழல் ஈச னெனுங் கனி**
**இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே."**

ஈசன் திருவடிகளைக் காண மனிதர்களே! தயவு செய்து வாருங்கள்! என்று அப்பர் அனைவரையும் கூவி அழைக்கின்றார். யார்தான் போகின்றார்கள்? அது புண்ணியம் செய்தவர்க்கே கிட்டும். அதே போலத்தான் இந்த மாநாட்டிற் கலந்து கொண்டவர்கள் அனைவரும் இறையருளுக்குப் பாத்திரமானவர்களே என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இத்தகைய சிறப்புமிகு மாநாட்டிற் சில குறைகளும் இருக்கத்தான் செய்தன. கட்டுரையின் பூரணத்துவம் கருதியும் எதிர் காலத்தில் இவற்றைக் கருத்திற் கொள்ளவேண்டும் என்ற நலன் கருதியும் இவற்றை இங்கு பதிவு செய்கின்றேன்.

1. இத்தகைய மாநாடுகளைப் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களின் விடுமுறை தினமாகிய தை மாதத்தில் நடாத்தினால் இன்னும் பெருந்தொகையான மாணவர்களும் பெற்றோர்களும் இவற்றிற் பங்கேற்க வாய்ப்புண்டாகும்.

2. சிறப்பு உரையாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தி அவர்களின் உரை நேரத்தை அதிகரித்தல். மாநாட்டிற்கு மேலும் சிறப்பினைத் தரும்.
3. ஆய்வரங்கத்திற்குக் கூடுதல் நேரத்தினை ஒதுக்கிப் பார்வையாளர் களையும் பங்கேற்க உற்சாகப்படுத்துதல் (கேள்விகள், சந்தேக நிவர்த்திகள்).
4. கலைநிகழ்ச்சிகளுக்கென ஒருநாளைத் தனியாக ஒதுக்குதல்.

இறுதியாக ஒரு முக்கியமான விடயத்தை இங்கே குறிப்பிட வேண்டும் இளையோருக்கான சிறப்பு மலரொன்றும் இம்மாநாட்டில் வெளியிடப்பட்டது. அம் மலரில் சிட்னிமுருகன் ஆலயச் சைவமன்றத்தினர் நடாத்தும் சைவப்பாடசாலையிற் பயிலும் பதினெட்டு மாணவர்கள் தாம் பயின்ற வற்றை மிக்க ஆர்வத்துடன் தமது எழுத்துக்களிற் பதிவு செய்திருப்பது நல்ல ஆரோக்கியமானதொரு ஆரம்பம். “கற்றாரைக் கற்றாரே காமுறுவர்” என்பதற்கிணங்க சிட்னிவாழ் சைவத்தமிழ் அறிஞர்கள் பலர் தமது பங்களிப்பைச் செய்யவும், பிற நாடுகளிலிருந்து வந்திருந்த அறிஞர்களோடு தம்கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுக்கு இணையாக ஆய்வரங்கங்களிற் பங்குபெறவும் இம்மாநாடு நல்லதொருகளமாக அமைந்திருந்தது.சிட்னிமுருகன் ஆலயச் சைவமன்றத்தினரும், உலகச் சைவப்பேரவையின் அவுஸ்ரேலியாக் கிளையினரும் சிட்னியில் வாழும் அறிவுத்திறனும் செயலூக்கமும் நிறைந்த, சைவத்திலும், தமிழிலும் பற்றுக்கொண்ட சிறந்தோரை, நல்லோர் பலரை மேலும் கண்டறிந்து அவர்களையும் தம்மோடு இணைத்துக் கொண்டு அவுஸ்திரேலியாவில் வாழும் அனைத்துச் சைவ ஆர்வலர்களும் பங்கேற்று வளம் பெறக் கூடியதான ஒரு ஆரோக்கியமான சூழலை உருவாக்கி வளர்க்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இன்னும் பல காத்திரமான பணிகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டும் என்று சிட்னிமுருகன் திருவடிகளை வணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன்.

**“மனமது நினைய வாக்கு வழுத்த**
**மந்திரங்கள் சொல்ல**
**இனமலர் கையிற் கொண்டங்**
**கிச் சித்த தெய்வம் போற்றிச்**
**சினமுதலகற்றி வாழும் செயலற**
**மானால் யார்க்கும்**
**முனமொரு தெய்வமெங்குஞ் செயற்கு”** -சிவஞான சித்தியார்

**இதன் பொருள்-**
வழிபாடு ஐந்து படிகளைக் கொண்டன. அவையாவன.
1) இவ்வுலகப் பொருள்கள்மேற் செல்லும் உணர்விலிருந்து விடுபடுதல்.
2) உயிருருக்கமான தியானம்.
3) துதி வழிபாடு.
4) மந்திர சகித அர்ச்சனை.
5) தார்மீக வாழ்வில் ஈடுபடும் அளவிற்கு மனதைத் தூய்மையாக்கல்.

**பன்னிரு திருமுறைகளை நினைக்க, பாட, கேட்க, சிந்திக்கப் பாபம் தொலைந்து நற்கதி கிட்டும்.**

*அன்பே சிவம்.*

# சிட்னி முருகன் சைவநெறி மகாநாட்டுப் பயணம்

சைவப்புலவர் செ. நவநீதகுமார்
இயக்குனர், திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்தப் பயிற்சி மையம் (கொழும்பு)

சிட்னி முருகன் சைவமன்றமும் உலக சைவப்பேரவை அவுஸ்திரேலியாகிளையும் இணைந்து 2014 ஆகஸ்ட் 29,30,31 ஆகிய திகதிகளில் சிட்னி முருகன் சைவநெறி மகாநாடு நடந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இம்மகாநாட்டிற்கு இலங்கையில் இருந்து ஐவரையும் தமிழ் நாட்டி லிருந்து நால்வரையும் அழைத்திருந்தனர். மலேசியா போன்ற ஏனைய நாடுகளில் இருந்தும் அறிஞர்கள் வந்து மகாநாட்டிலே பங்குபற்றினர்.

இலங்கையில் இருந்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள், பேராசிரியர், கலாநிதி நா.வி.மு. நவரத்தினம், பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன், சித்தாந்தரத்தினம் வே. கனகசபாபதி ஆகியோருடன் என்னையும் அழைத்திருந்தனர்.

ஆகஸ்ட் 28ந்திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் இருந்து எமது பயணம் ஆரம்பமாகியது. ஐவரையும் பயணம் அனுப்பத் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மைய (கொழும்பு) பேராசிரியர், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் திரு. மா. கணபதிராஜ் அவர்களும் மிஷனுக்கு வந்திருந்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மலேசிய விமானத்திலே ஐவரும் ஏறி அமர்ந்தோம். பகல் 12.50 விமானம் மலேசியா நோக்கிப் புறப்பட்டது. மலேசியாவில் அவ்வூர் நேரப்படி மாலை 7.00 மணிக்கு விமான நிலையத்தில் இறங்கியிருந்தோம். அன்றிரவு 11.45இற்குத் தான் அடுத்த பயணம். விமான நிலையத்திலே சற்று நேரம் சுற்றிப் பார்த்தோம். பின்னர் அங்கு உள்ள உணவுச் சாலையிலே இராப்போசனத்தை முடித்துக் கொண்டு விமானம் ஏறுவதற்கு உரிய இடத்திற்குச் சென்றோம். உரிய நேரத்திற்கு யாவரும் விமானத்தில் ஏறி அமர்ந்தனர். விமானம் 30 நிமிடம் தாமதமாக இரவு 12.30இற்குத்தான் சிட்னி நோக்கிப்புறப்பட்டது. இப்பயணத்துக்குரிய நேரம் 8 மணி 15 நிமிடம்.

29ந்திகதி காலை 10.30 மணிக்குச் சிட்னி சென்றடைந்தோம். விமானத்தில் இருந்து இறங்கியதும் முற்றிலும் மாறுபட்ட காலநிலை கடுங்குளிர். விமான நிலையத்தில் எமது பொதிகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தோம். எம்மை அழைத்துச் செல்வதற்கு வந்திருப்பவர்களுக்கு எம்மைத் தெரியாது

எப்படி அடையாளம் காணுவார்கள்? என்று எம்முள்ளே பேசியபடியே சுவாமி அவர்களை முன்னேவிட்டு நாம் பின்னே சென்றோம். முருகன் கோயிற் தொண்டர் இருவர் சுவாமியைக்கண்டு சிரமமில்லாது எம்மை அறிந்து கொண்டனர். திரு. பாலேந்திரா அவர்களும் எம்மை அழைத்துச் செல்ல வந்திருந்தார். விமான நிலையத்தில் இருந்து நேராக சிட்னி முருகன் கோயிலுக்குச் சென்றோம். விமான நிலையத்தில் இருந்து சுமார் ஒரு மணி நேரப்பயணம். கோயில் அலுவலகத்திலே சைவமன்றத் தலைவர் திரு. தவபாலச்சந்திரன், செயலாளர் திரு. ஈழலிங்கம், பொருளாளர் திரு. சபா ஆனந்தன் மற்றும் திரு. சபாநாதன், திரு. அர்ச்சுனமணி ஆகியோரோடு வேறும்பல அன்பர்கள் எம்மை வரவேற்றனர்.

ஒவ்வொருவரையும் ஒவ்வொருவருடைய வீடுகளிலே தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். நல்லை ஆதீனசுவாமிகளும், தருமபுர ஆதீனத்தம்பிரான் சுவாமிகளும் நானும் கோயிலுக்கு முன்னால் உள்ள கோயில் வீட்டிலே தங்கினோம். மதிய உணவுண்டு சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டோம்.

மாலை 4.30 மணிக்கு முருகன் கோயிலுக்குச் சென்றோம். அங்கு விசேட பூசைநடைபெற்றது. பின்னர் மங்கல வாத்தியம் முழங்க நடராஜர் முருகன், நால்வர் திருவுருவப்படங்கள் வீதிவலம் வந்து ஆலய முன்றலிலே நந்திக் கொடி ஏற்றப்பட்டது. ஆலய தெற்கு வீதியிலே விசேடமாக அமைக்கப்பட்ட மண்டபத்திற்கு திருவுருவப் படங்கள் கொண்டு வரப்பட்டன. அங்கு அவற்றை வைத்து மகாநாட்டின் தொடக்கவிழா ஆரம்பமானது. திருமுறைப் பண்ணிசை ஆதீன சுவாமிகள், தம்பிரான் சுவாமிகள், சிவாசாரியார்களின் ஆசியுரை இவற்றைத் தொடர்ந்து மகாநாட்டுக்கு அழைக்கப்பட்ட பேராளர்களின் உரைகள் இடம்பெற்றன.

30ந்திகதி காலை 8.30மணிக்கு நாதசுர இசையுடன் இரண்டாம் நாள் மகாநாடு ஆரம்பமாகியது. ஆசியுரை பண்ணிசை சிறப்புரை என நிகழ்ச்சிகள் சிறப்பாகப்பகல் 1.00 மணிவரை நடைபெற்றன. காலையில் மகாநாட்டுச் சிறப்புமலரும் வெளியிடப்பட்டது.

மாலை 1.30 மணிக்கு மூன்று இடங்களிலே மகாநாட்டு மலரில் வெளிவந்த கட்டுரைகள் பற்றிய ஆராய்ச்சி அரங்கம் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு பண்ணிசை நாடகம் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

31ந்திகதி காலை 8.30மணிக்கு மூன்றாம்நாள் நிகழ்வுகள் பண்ணிசையுடன் ஆரம்பமாகின.

பேராளர்களின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

பகல் 1.30 மணிக்கு மூன்று அரங்குகளிலே ஆராய்ச்சி அரங்கம் நடைபெற்றது.

மாலை 5.00 மணிக்கு மாநாட்டின் நிறைவு விழா நடைபெற்றது. விழாவிற் கலந்துகொண்ட பேராளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் மாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரவு கலைநிகழ்வுகள் Ryde civic Centre இல் நடை பெற்றது நடனம் நாடகம் ஆகியன சிறுவர் இளைஞர்களால் நடத்தப்பட்டது.

இம்மகா நாட்டில் பங்கு கொள்ளவெனத் தருமபுர ஆதீன மூத்த தம்பிரான் முனைவர் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், முனைவர் சபாரத்தினம் சிவாசாரியார் ஓதுவார் அரிகர தேசிகர், முனைவர் நல்லசிவம் ஆகியோர் தமிழ் நாட்டில் இருந்து வந்திருந்தார்கள்.

முதலாந்திகதி திங்கட்கிழமை மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த வெளிநாட்டவரைச் சிவன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். ஆதீனம் சுவாமிகள் தம்பிரான் சுவாமிகள் ஆகியோருடன் என்னையும் திரு. வேலுப்பிள்ளை அவர்கள் தமது காரில் அழைத்துச் சென்றார்.

அழகிய இராசகோபுரத்துடன் சிவாலயம். சிவனுக்கு வலப்புறம் அம்பாள் தனிச்சந்நிதி அம்பாள் சன்னிதியிலும் இராசகோபுரம். எதிர்த்திசை நோக்கித் தனிக்கோயில் வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயில் இராசகோபுரத்துடன் அமைந்துள்ளது. இத்தரிசனம் முடித்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றோம். அன்று மதிய உணவு அனைவருக்கும் திரு. பாலேந்திரா தமது வீட்டில் ஏற்பாடு செய்திருந்தார். அதன் பின்னர் துர்க்கையம்பாள் கோயிலுக்குச் சென்று பின்னர் இருப்பிடம் வந்து சேர்ந்தோம். எமக்குத் தேவையான உதவிகளை ஸ்ரீ என்பவர் செய்து கொடுத்தார். அவரும் ஒருஇரவு எம்மை தமது வீட்டுக்கு அழைத்து உபசரித்தார்.

அமலன் என்பவர் ஆதீனம் சுவாமிகளுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவி செய்தார். அமலனும் ஒருநாள் இரவு எம்மைத் தமது வீட்டுக்கு அழைத்திருந்தார். அங்கு இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த பல இளைஞர்கள் எம்முடன் அழவளாவி மகிழ்ந்தனர். நல்லையாதீனச் சுவாமியையும் என்னையும் மெல்போனிற்கு அழைத்திருந்தனர். சுவாமி அவர்களுக்கு வரமுடியவில்லை.

செப்டம்பர் 4ஆம் திகதி பகல் 1.30 மணிக்கு சிட்னியில் இருந்து மெல்போனிற்கு நானும், முனைவர் நல்லசிவம் அவர்களும் விமானத்தில் புறப்பட்டோம். 950 கிலோமீற்றர் தூரம் சுமார் 1.30 மணி நேரப் பிரயாணம்.

மெல்போன் விமான நிலையத்தில் எம்மை அழைத்துச் செல்ல அரவிந்தன் தம்பதியினர் வந்திருந்தனர். அவர்கள் வீட்டுக்குச் சென்று மதிய உணவு உண்டு சற்றுநேரம் ஓய்வெடுத்தோம்.

அன்று மாலை 7.30 மணிக்கு திருவள்ளுவர் அறக்கட்டளை அமைப்பினரால் சொற்பொழிவு ஏற்பாடாகி இருந்தது. "கந்தபுராணமும் தமிழும்" என்ற தலைப்பிலே நான் சொற்பொழிவு செய்தேன். தேவாரமும் தமிழும் என்ற தலைப்பிலே முனைவர் நல்லசிவம் சொற்பொழிவு செய்தார்.

எம்மை அழைத்துச் செல்ல திரு சிவராசா வந்திருந்தார். அவர் என்னை Carrwn downs சிவா விஸ்ணு ஆலய இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். இரவு உணவு தயாரக வைத்திருந்தனர். தங்குவதற்குரிய வசதிகளை கோயிற்காரர் செய்திருந்தனர். 5ஆம் திகதி காலையிலே சிவாலய தரிசனம் செய்தேன். மாலை அங்கு "மகோற்சவம்" பற்றிய சொற்பொழிவு செய்தேன். மாவையாதீனத்தைச் சேர்ந்த சாண்டிலியன் ஐயா அவர்கள் இரவு தம்வீட்டுக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

சிவாலயத்திலே சைவத் திருமுறைப் பயிற்சி மையத்திலே பயின்ற திரு.திருமதி. பாஸ்கரன் வந்து சந்தித்தனர். எமது வெளியீடான சைவநீதி வெளியீட்டுக்கு பலவகையிலும் உதவி புரிந்த திருநீலகண்டன் அவர்களின் மகன் மயூரன் குடும்பத்துடன் வந்து சந்தித்து மகிழ்ந்தார். ஜனந்தன் தம்பதியினரும் சந்தித்தனர்.

6ஆம் திகதி பகல் சிவா விஸ்ணு கோவில் தலைவர் நான் தங்கியிருந்த வீட்டுக்கு வந்து மகிழ்வுடன் என்னை வழியனுப்பி வைத்தார். சிவகாந்தன் என்பவர் என்னை விமான நிலையத்துக்கு அழைத்து வந்தார். சிட்னி வந்ததும் திரு பாலேந்திரா ஒருவரை விமான நிலையத்துக்கு அனுப்பியிருந்தர். அவர் எனனை அழைத்துச் சென்றார். அன்று இரவு 7.30 மணிக்கு சிட்ணி முருகன் கோயில் கலாசார மண்டபத்திலே சொற்பொழிவு ஏற்பாடு செய்திருந்தார்கள். "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்ற தலைப்பிலே சொற்பொழிவாற்றினேன்.

6ஆம் திகதி பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன் அவர்கள் சைவ சித்தாந்த பயிலரங்கு நடத்தினார் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை இந்நிகழ்வு நடைபெற்றது. அன்று இதுபோல் கலாநிதி மு. நவரத்தினம் அவர்கள் பண்ணிசைப் பயிலரங்கு நடத்தினார்.

7ஆம் திகதி புராணபடனம் பயிலரங்கு காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை நடைபெற்றது. கலாநிதி. ச. கணபதிப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். அவர் கந்தபுராணம் பற்றி விளக்கிக்கூறினார். தொடர்ந்து சித்தாந்தரத்தினம் வே. கனகசபாபதி அவர்கள் திருவாதவூரடிகள் புராணம்

திருவடி பெற்ற சருக்கத்தில் இறுதியாக உள்ள 15 பாடல்களைப் படித்தார். நான் பயன் சொன்னேன்.

மதிய உணவின்பின் பயிலரங்கிலே பெரிய புராணத்திலே திருஞான சம்மந்தர் புராணத்தில் மூன்று அற்புதங்களை விளக்கிக்கூறினேன். ஞானப் பால் உண்டமை, பொற்கிழி பெற்றமை, எலும்பும் சாம்பரும் பெண்ணுருவா னமை பற்றி விளக்கினேன். தொடர்ந்து கந்தபுராணம் தட்சகாண்டம், கந்த விரத படலம் பற்றிக் கூறினேன். மேலும் பயிலரங்கிலே கலந்து கொண்டவர்கள் சில கேளவிகள் மூலம் தங்களது சந்தேகங்களை கேட்டுத் தெளிந்து கொண்டனர். முதல்வாரம் நடைபெற்ற மாநாட்டிலும் இப்பயிலரங்கிலும் எமது சைவ சித்தாந்த திருமுறைப் பயிற்சி மையத் (கொழும்பு) திலே பயின்று பட்டம் பெற்ற திருமதி. கேசினி கோணேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இவர் 31ஆம் திகதி நடைபெற்ற ஆய்வரங்கிலும் கட்டுரை படித்தார்.

புராணபடன பயிலரங்கிலே திரு. நா.கணபதிப்பிள்ளை கருத்துரை வழங்கினார். திரு. செ. சத்தியமூர்த்தி சிட்ணிமுருகன் ஆலயத்தில் நடைபெறும் புராணபடனம் பற்றிக் கூறினார்.இப்பயிலரங்கோடு சைவநெறி மாநாடு இனிதே நிறைவேறியது.

சோமசுந்தரப் புலவரின் பேரன் டாக்டர் பாரதி சந்தித்துப் புலவரின் நூல்கள் கொடுத்தார். பத்தாவத்தை ஜெ. வசந்தகுமார், சோ. முருகானந்தன் ஆகியோரும் வந்து சந்தித்தனர்.

8ஆம் திகதி நாம் இலங்கைக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்தோம். காலையிலே முருகப் பெருமானைத் தரிசனம் செய்தோம். திரு. திருமதி. ஞானம் வந்திருந்தனர். ஞானம் அவர்கள் நிகழ்வுகளின் நிழற்படங்களை பிரதி பண்ணிக் கொடுத்தார். காலை 10.30 மணியளவில் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டோம். எம்மை வழியனுப்ப திரு. தவபாலச்சந்திரன், திரு. சபா ஆனந்தன், திரு வேலுப்பிள்ளை, திரு. அருச்சுனமணி ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். அவர்களின் அன்பான உபசரிப்புடன் மனமகிழ்ந்து எம்மை வழியனுப்பினர்.

பகல் 1.50 மணிக்கு விமானம் புறப்பட்டது. இரவு 8.40க்கு மலேசிய விமான நிலையத்தை வந்தடைந்தோம். மீண்டும் இரவு 11.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு இலங்கை நேரப்படி இரவு 11.45 மணியளவில் பண்டார நாயக்கா விமான நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்து எமது இருப்பிடம் வந்து சேர்ந்தோம்.

மனம் நிறைவான ஆன்மீகப் பயணம் என்பதால் உடல்சோர்வு இல்லா உளமகிழ்வு கொண்டோம்.

# சம்பந்தரின் சித்திரக் கவிகள்

சைவப்புலவர், திருமுறைச்செல்வர்
திருமதி. பத்மாவதி தங்கராஜா

தமிழ்விரகர் சம்பந்தப்பெருமான் சைவத்துக்கு மட்டுமல்லாது தமிழுக்கும் செய்தபணி மிக உர்வானது. தமிழுக்குப்புதியவகை யாப்புக்களைத் தந்தமையை இங்கு காணலாம். திருஞானசம்பந்தரின் வரலாற்றைக் கூறவந்த சேக்கிழார் பெரிய புராணத்தில் 2179, 2180 ஆகிய இரு பாடல்களிலும் சித்திரக்கவிகளின் வகைகளை (விகற்பச் செய்யுள்) பின்வருமாறு கூறுகின்றார்.

**"செந்தமிழ் மாலை விகற்பச்**
**செய்யுள்களான் மொழிமாற்றும்**
**வந்தசொல் சீர்மாலை மாற்றும்**
**வழிமொழி எல்லா மடக்கும்**
**சந்த இயமகம் ஏகபாதம்**
**தமிழ் இருக்குக் குறள் சாத்தி**
**எந்தைக்கு எழுகூற்று இருக்கை**
**ஈரடி ஈரடிவைப்பு**

**நாலடி மேல்வைப்பு மேன்மை**
**நடையின் முடுகும் இராகச்**
**சால்பினில் சக்கரம் ஆதி**
**விகற்பங்கள் சாற்றும் பதிகம்**
**மூல இலக்கியம் ஆக**
**எல்லாப் பொருள்களும் முற்ற**
**ஞாலத்து உயர்காழி யாரைப்**
**பாடினார் ஞானசம்பந்தர்."**

பக்திப்பனுவலாசிரியரான சம்பந்தர் சித்திரக்கவிகளை ஆக்குவதில் அதீத அக்கறை காட்டியுள்ளார் என்பது புலனாகின்றது. அது அவருடைய தனித் திறமையாகும்.

இச்சித்திரக்கவி மிறைக்கவி எனச்சுட்டப்படுகிறது. இக்கவி படிப்பவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதோடு கவிஞனின் கவித்துவத்தையும் வெளிப்படுத்து கின்றது. மனதைப் பிணிக்கும் சொற் சித்திரமாகவுள்ள கவிதை எதுவும்

சித்திரக்கவியாகவே கொள்ளத்தக்கது. வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இவற்றுள் ஓரின எழுத்துக்களால் வரும் பாட்டுக்களையும் சித்திரக்கவி யாக இலக்கண நூல்கள் ஏற்கின்றன.

கீழ்வரும் அட்டவணை சித்திரக்கவி வகைகள் எந்தெந்த திருமுறையில் எத்தனையாம் பதிகம் என்ற விபரமும், இறுதியில் சம்பந்தரால் பாடப்பட்ட சித்திரங்களின் மொத்தப் பதிகங்களின் எண்ணிக்கையும் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. சித்திரக்கவிகள் பதிக எண்ணிக் கையில் நோக்கின் எண்பதுக்கு மேற்படப் பாடியுள்ளார். இதிலிருந்து சம்பந்தர் பாடிய தேவாரங்களில் நாலிலொரு பங்கு சித்திரக் கவிகளாக உள்ளன என்பது உறுதியாகவுள்ளது.

| சித்திரக்கவிகள் | பதிகம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. எழுகூற்றிருக்கை | 1 | 128 | 1 |
| 2. சக்கரமாற்று | 11 | 70,73 | 2 |
| 3. கோமுத்தரி (வழிமடக்கு மாவின் பாய்ச்சல்) | 11 | 74 | 1 |
| 4. ஏகபாதம் | 1 | 127 | 1 |
| 5. மொழிமாற்று | 1 | 117 | 1 |
| 6. யமகம் (இயமகம்) | 111 | 113 - 116 | 4 |
| 7. மாலைமாற்று | 111 | 117 | 1 |
| 8. திருத்தாளச்சதி | 1 | 126 | 1 |
| 9. திருவிராகம் | 1 | 19 – 22 | 4 |
| | | 120 – 125 | 6 |
| | 11 | 29 – 34 | 6 |
| | | 97 – 101 | 5 |
| | 111 | 52 – 53 | 2 |
| | | 68 – 88 | 21 |
| 10. வழிமொழித்திருவிராகம் | 111 | 67 | 1 |
| 11. நாலடிமேல்வைப்பு | 111 | 3,4,108 | 3 |
| 12. ஈரடிமேல்வைப்பு | 111 | 5,6 | 2 |
| 13. ஈரடி | 111 | 110 – 112 | 3 |
| 14. திருமுக்காடல் | 111 | 94 – 99 | 6 |
| 15. திருஇருக்குக்குறள் | 1 | 90 – 96 | 7 |
| | 111 | 33 – 41 | 9 |

| | | | |
|---|---|---|---|
| 16. பூட்டுவிற்பொருள்கோள் | 1 | 124 | 1 |
| 17. யாழ்மூரி | 1 | 136 | 1 |

**திருஎழுகூற்றிருக்கை**

சம்பந்தர் பாடிய சித்திரக்கவிகளைத் தனித்தனியாக நோக்கில் எழுகூற்றிருக்கை தனித்துவம் கொண்ட ஆக்கமாகக் கருதத்தக்கது. ஏனையாவும் 10,11,12 பாக்களைக் கொண்டவையாக அமைய இது தனிச் செய்யுளொன்றாய் 47 வரிகளைக் கொண்டமைந்துள்ளது. அத்துடன் தந்தையார் சம்பந்தரை ஆலயம் தோறும் தன் தோளில் சுமந்து சென்று வழிபாடு செய்து வந்தார். ஆலயங்களில் சம்பந்தர் பாடிய பதிகங்களை இரவில் சிவபாதவிருதையர் மனனம் செய்து வந்தார். பல கோயில்கள் மீதும் பதிகங்கள் பாடியதால் அவை எல்லாவற்றையும் மனனம் செய்ய முடியவில்லை என்று தந்தை வருந்தினார். அவரின் வருத்தத்தைப் போக்குவதற்காக இப் பதிகத்தைப் பாடி இதனை மனனம் செய்தால் எனது பதிகங்கள் எல்லாவற்றையும் பாடிய பயன் கிட்டுமெனக் கூறிக் கொடுத்தார்.

எழுகூற்றிருக்கையானது ஒருரையாக்கி முறையானே குறும்பாக்கள் முன்னின்றும் புக்கும், போந்தும் விளையாடும் குறுமக்கள் பெற்றிமையான், வழுவாமை ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது என்று விளக்குகிறார். “யாபருங்கலவிருத்தி” உரைகாரர்.

உதாரணம் : “ஓருருவாயினை மானாங்காரத்து”......

இது இரதபந்தமாக அமைக்கும் வழக்கு கருதியே அதனைச் சித்திரக்கவியாக கொள்ளப்படுகிறது. எழுகூற்றிருக்கை அறைகளை அமைக்கும் போது அது கீழ் வருமாறு அமையும்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 | 3 | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

மேற்காட்டப்பட்டவாறு அமையும் நிலையில் ஒரே செய்யுளில் ஒன்று என்னும் சொல் பதின்மூன்று முறையும் மூன்று என்னும் சொல் பதினொரு முறையும் நான்கு என்னும் சொல் ஒன்பது முறையும் ஐந்து ஒரு தடவையும், ஆறு ஐந்து தடவைகள் வருதல் அவதானிக்க முடிகிறது.

ஞானம்பந்தர் இணைக்குறளாசிரியப்பாவிலே இவ் எழுகூற்றிருக்கையைப் பாடியுள்ளார். அத்துடன் செய்யுள் ஓசை இன்பம் தரும் அம்சங்களுள் எதுகை, மோனைகள் சிறப்பாக அமைந்துள்ளன. அடி எதுகை குறைந்த அளவிலே காணப்பட்டிருப்பினும் அதை ஈடுசெய்யும் வகையில் ஓரடியிலேயே அமையும் இணையெதுகை, மொழிப்பெதுகை முதலியவற்றையும் கையாண்டுள்ளார்.

சம்பந்தர் தன் பதிகங்களில் இறுதி நான்கு பாடல்களில் சிவன், இராவணன், மாலாயன், சமண பௌத்த கண்டனம், ஆசிரியரின் பெயர் பாடற்பயன், முதலியவை கூறல் போன்றும் பல பாடல்களாலன்றி ஒரே செய்யுளாயமைந்த இத்திருவெழுகூற்றிருக்கையுள்ளும் அதன் இறுதிப் பகுதியில் மேல் கூறிப்பிட்ட அம்சங்களையும் அமைத்துக் காட்டியது சிறப்பம்சமாக உள்ளது.

தொடரும் ..........

## திருநல்லூர்ச் சிவலிங்கம் பஞ்சவர்ணம் காட்டும் அற்புதம்

| | | |
|---|---|---|
| காலை | 6.00 – 8.30 | - தாமிரநிறம் |
| | 8.30 – 11.00 | - இளஞ்சிவப்பு |
| பகல் | 11.00 – 1.30 | - உருக்கிய தங்கம் |
| பிற்பகல் | 1.30 – 4.00 | - நவரத்தினப்பச்சை |
| மாலை | 4.00 – 6.30 | - சொல்ல முடியாத நிறம் |

Continuation of the journal.......

# SAIVA RELIGION

**Auther : S. Sivapathasundaram B.A.**
**English Translation : Sidthantharatnam**
**Dr. K. Ganesalingam**

**Sivatatvas: 5**
Natham, Vindhu, Saathaakkiyam, Easuram, Sudhaviththai ....5

**Vdyatatvas: 7**
Kaalam, Niyathi, kalai, viththai, Aragam, Purudan, Maya ....7

**Atmatatvas: 24**

| | | |
|---|---|---|
| Anthakarana: | Manam, Buddhi, Chiththam, Ahangharam | ....4 |
| Gnanenthriya : | Kathu (Ear), Thuvakku (Mei – Body, skin), kann (eye), Naakku (vaai, Tongue), Mooku (Nose) | ...5 |
| kanmenthriya : | Vaakku (Tongue), Kaal (Paatham), Kai (Hand), paayu (Anus), Upaththam (Generative organ) | .........5 |
| Tanmaatirais | : Sabtha, Parisa, Roopa, Rasa, Kantha | .........5 |
| Boothas | : Earth, water, Fire, Air, Space | ........5 |
| | | 24 |
| **Total Tayvas:** | | **36** |

Thuvakku is a tatva that shows heat, cold, softness, hardness etc., in the skin. Rasa-taste; Kantha – smell.

Sthula sarira is made up of boothas, Sukshma sariras is made up of tatvas from sukshma bootha to vithya tatva, and karana sarira of Siva tatvas.

Note: Because of anavam, I become angry with Raman. Raman becomes angry with me. If Raman was not there that anger would not arise. Hence some may say that God created Raman for anavam to act. This is very wrong and will be easily understood when we see the other side. Raman also becomes angry with me; hence God must have created me for Raman. To say that Raman is created for me and that I am created for Raman are contradiciting each other. One is not created for another. Likewise, all beings are created for their own emancipation and not for one another. However when they do their work, each has to workk in association with another.

Continued .......

# தீக்ஷை

சைவப்புலவர்
செல்லையா நவநீதகுமார்

தீக்ஷை என்ற சொல்லின் பொருள் ஞானத்தைக் கொடுத்து பாசத்தைக் கெடுப்பதாகும். (தீ - கொடுத்தல், க்ஷை - கெடுத்தல்) இது சமயம், விஷேடம், நிர்வாணம் என மூன்று வகைப்படும்.

சமய தீக்ஷை பெற்றவரே சைவசமயி ஆவார். மந்திரபூர்வமாக சங்கற்பித்துச் செய்யப்படும், விவாகம், அந்தியேட்டி, சிரார்த்தம், முதலிய கிரியைகள் செய்வதற்குரிய தகுதி உடையவர் தீக்ஷை பெற்றவரே. அதுவன்றி தீக்ஷை பெற்றவரே விரதம் முதலியன அனுஷ்டிக்கவும், சைவசமய சாஸ்திர தோத்திர நூல்களைக் கற்பதற்கும் திருமுறை ஓதுவதற்கும் புராண படனம் செய்வதற்கும் தகுதியுடையவர் ஆவார்.

சிவபுண்ணியம் பொதுச்சிவ புண்ணியம், சிறப்புச் சிவபுண்ணியம் என இருவகைப்படும். தீக்ஷை இல்லாது செய்யப்படும் தொண்டுகள் பொதுச் சிவபுண்ணியத்தைச் சாரும். தீக்ஷை பெற்றுச் செய்யும் தொண்டுகள் சிவ புண்ணியமாகச் செய்தவருக் நன்மை பயக்கும். முகவரி எழுதாது அனுப்பும் கடிதம் உரியவரைச் சென்றடையாதது போல தீக்ஷை இல்லாதவர்கள் செய்யும் தொண்டுகளின் பலன் உரியவரைச் சாராது பொதுச் சிவபுண்ணியத்தைச் சாரும்.

திருத்தொண்டர் சரித்திரத்தைச் சொன்ன உபமன்யு முனிவரைச் சேக்கிழார் "யாதவன் துவரைக் கிறையாகிய மாதவன் முடிமேலடி வைத்தவன்" என்றார். உபமன்னியு முனிவர் கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்தார். அச்சரித்திரம் வருமாறு.

கிருஷ்ணர் புத்திரப்பேறு வேண்டித் தினமும் சிவபூசை செய்து வந்தார். நெடுங்காலம் சிவபூசை செய்தும் இறை அருள் கிடைக்கவில்லை. ஒருநாள் உபமன்னியு முனிவரின் சிவபூசைக்குப் பூக்கள் கிடைக்கவில்லை. கிருஷ்ணர் பூசித்துவிட்ட பூக்கள் ஆற்றில் மிதந்து வர அவற்றை எடுப்பித்து முனிவர் பூசை செய்தார். இதை அறிந்த கிருஷ்ணர் முனிவரின் முன்வந்து வணங்கி இச்செயல் பற்றி வினவினார். சைவ ஆகமத்தில் விதித்தபடி தீக்ஷை பெற்று மந்திர கிரியா பாவனையால் சிவனைப் பூசித்தலே பூசையாகும். தீக்ஷை இல்லாது செய்யும் பூசை பூசையும் அல்ல அங்கு பயன்படுத்தப்பட்ட பத்திர புஷ்பங்கள் நிருமாலியமுமாகா என்றார் முனிவர். கிருஷ்ணர் முனிவரைப் பணிந்து அவரிடம் தீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்து தான் விரும்பிய பயனைப் பெற்றான். இதிலிருந்து தீக்ஷை பெறாது செய்யும் பூசை, வழிபாடு பயனற்றது என அறிய முடிகின்றது.

சைவநூலில் கூறப்பட்டம் பாசம்மூன்றையும் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிர வேறுயாதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று. ஆதலால் தீட்சையினால்தான் மோட்சம். ஆச்சிரமங்களினாலும் மற்றைய கருமங்களினாலும் மோட்சமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர் போல்வர். தோணியின்றிக் கடலைக் கடக்க விரும்பினவர் போல்வர் என்று வாயு சங்கிதையிற் கூறப்பட்டுள்ளது.

தீக்ஷை பெறுதலை "தீக்ஷா மந்திர உபதேசம்" என்று குறிப்பிடுவர். மந்திரங்களில் உயர்ந்ததாகிய திருவைந்தெழுத்தைக் குரு மூலமாக உபதேசிக்கப்படுவதே தீட்சையாகும். இறைவனே குருவாக வந்து உபதேசித்து ஆன்மாவைப் பாசங்களினின்றும் மீட்டுத்தன் திருவடிக்கீழ் இருக்கும் படி அருள்வான்.

மூவகை ஆன்மாக்களுக்கும் இறைவன் தீக்ஷை கொடுத்து அருளும் முறையைச் சிவஞான சித்தியார் பாடல் மூலம் அறியலாம்.

**உரைதரும்இப் பசுவர்க்கம் உணரின் மூன்றாம்**
**உயரும்விஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலர்**
**நிரையின்மல மலம்கன்ம மலம்கன்ம மாயை**
**நிற்கும்முதல் இருவர்க்கு நிராதார மாகிக்**
**கரையில்அருள் பரன்துவிதா சத்திநிபா தத்தால்**
**கழிப்பன்மலம் சகலர்க்கும் கன்மம் ஒப்பில்**
**தரையில்ஆ சான்மூர்த்தி ஆதார மாகித்**
**தரித்துஒழிப்பன் மலமசதுர்த்தா சத்திநிபா தத்தால்**

ஆணவமலம் மட்டுமுடைய விஞ்ஞானகலருக்கு அவர்கள் அறிவே வடிவாகி உள்நின்று உணர்த்தி மல நீக்கம் செய்வான். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையுடைய பிரளயாகலருக்கு இறைவன் நீலகண்டமும் மான்மழு தாங்கிய திருக்கரமுமுடைய மகேஸ்வர வடிவில்வந்து மலநீக்கம் செய்வான். வேறொருவடிவை ஆதாரமாகக் கொள்ளாது இறைவன் தமது வடிவில் அருள்புரிவதால் இவ்விரு வகையினர்க்கும் செய்யப்படும் தீட்சை நிராத தீட்சை எனப்படும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடைய சகலர்க்கு இறைவன் மானிட வடிவில் உள்ள குருவை ஆதாரமாகக் கொண்டு மல நீக்கம் செய்து அருள் புரிவதால் இவர்களுக்குச் செய்யும் தீட்சை சாதார தீட்சை எனப்படும்.
முதியவர், பாலர், நோயுடையோர், ஆசார ஒழுக்கமில்லாத அபக்குவருக்கு பீஜாக்கரமின்றிச் செய்யும் உபதேசம் நீர்பீஜ தீட்சை எனப்படும். பக்குவர்களுக்கு செய்யும் தீட்சை சபீசதீட்சை எனப்படும்.

**சமயதீட்சை**
முதலாவதாகச் செய்யப்படும் தீட்சை. இது சிவதீட்சை என்றும் கூறப்படும். ஏழு அல்லது ஒன்பது வயதிலே தகுதி வாய்ந்த சிவாசாரியார் மூலம் தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இது நயனம், பரிசம், மானசம், சாத்திரம், வாசகம், யோகம், ஔத்திரி என ஏழு வகைப்படும்.

1. **நயன தீட்சை**
   ஆசாரியார் சிவமாக நின்று சீடனைத் தலை தொடங்கி கால் வரையும் அருட்பார்வை யாற் பார்த்து அவனுடைய மலத்தைக் கெடுத்தல்.

2. **பரிச தீட்சை**
   ஆசாரியார் தமது கையைச் சிவபெருமானுடைய திருக்கரமாகப் பாவித்து சீடனின் தலையில் கைவைத்து அவனுடைய மாயா மலத்தைக் கெடுத்தல்.

3. **மானச தீட்சை**
   யோக மாக்கமாக ஆசாரியார் சீடனுடைய மனத்திற் பிரவேசித்து ஆன்ம போதத்தை நீக்கி சிவபோதத்தை உண்டாக்குதல்.

4. **சாத்திர தீட்சை**
   பதி பசு பாச இயல்புகளை விளக்கி பசு பாசத்தினின்றும் நீங்கி பதியை அடையும் தன்மையைப் போதிப்பதாகும்.

5. **வாசக தீட்சை**
   திருவைந்தெழுத்தையும் பதினொரு மந்திரத்தையும் உபதேசித்தல்.

6. **யோக தீட்சை**
   நிராதார சிவயோகத்தை அப்பியாசம் பண்ணுவித்தலாகும்

7. **ஔத்திரி தீட்சை**
   ஔத்திரி என்பது ஓமத்தோடு கூடச் செய்யப்படுவது எனப் பொருள்படும். (ஹோத்திரம் - ஓமம்) ஔத்திரி தீட்சைக்கு உரித்தில்லாதார்க்கு நயனம் முதலிய தீட்சை செய்யப்படும். ஔத்திரியோடு கூடவும் செய்யப்படும்.

ஔத்திரி தீட்சை கிரியாவதி, ஞானவதி என இரு வகைப்படும். குண்டமண்டலங்களை புறத்தேயிட்டு ஆகுதி செய்து செய்யப்படுவது கிரியாவதி. ஞானவதி குண்டமண்டலங்களையும் கிரியைகளையும் மானசமாகச் செய்வது.

சமய தீட்சை சரியைக்குரியது. சமயதீட்சை பெற்றவர்களுக்குக் குரு உபதேசித்த மந்திரத்தை செபிக்கும் அதிகாரம் உண்டு.

**விசேட தீட்சை**
சமய தீட்சை பெற்று ஒழுங்காக நாள்தோறும் அநுட்டானம் செய்து வருவோர் சிவனைப் பூசிக்க விரும்பிக் குருவை அடைந்து தமது எண்ணத்தை விண்ணப்பிக்க அவர்கள் பக்குவத்தை அறிந்து சிவபூசை எழுந்தருளப் பண்ணும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்குவதே விசேட தீட்சை ஆகும். சிவபூசை ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை, அதிகாரபூசை என மூன்றுவகைப்படும். ஆன்மார்த்த பூசை - தன் ஆன்மாஈடேற்றத்திற்காகச் செய்யப்படுவது. இது அவருக்கு மட்டுமன்றி மனைவி மக்களுக்கும் பயனளிக்கும். பரார்த்த பூசை - பிறர் பொருட்டு செய்யப்படுவது. இது திருக் கோவிலில் நிகழும் பூசையாகும். இதில் அவ்வூர் மக்களும் அக்கோயிலை வழிபடுவோரும் பயன் பெறுவர். அதிகார பூசை - மடாலயங்களின் ஸ்தாபகர்களால் அத்திரு மடங்களின் நிலைபேற்றின் பொருட்டு எழுந்தருளுவிக்கப்பட்ட மூர்த்திகளை அவ்வாசாரியார்கள் வழிவழியாகச் செய்து வரும் பூசை.

ஆன்மார்த்த பூசை - சுத்த பூசை, கேவல பூசை, மிச்சிர பூசை என மூன்று வகைப்படும். சுத்த பூசை - சிவலிங்கத்தை மட்டும் பூசிப்பது. கேவல பூசை - சிவலிங்கத்தோடு உமாதேவியார், விநாயகர், முருகன், இடபதேவர் ஆகிய ஐவரையும் பூசிப்பது. மிச்சிர பூசை - சூரியன், விநாயகர், சிவலிங்கம், உமாதேவி, முருகன், இடபதேவர், சண்டேசுவரர் ஆகிய எழுவரையும் பூசிப்பது.

ஆன்மார்த்தலிங்கம் - இட்டலிங்கம் (உடையவர்) க்ஷணிகலிங்கம் என இருவகைப்படும்.

இட்டலிங்கம் அல்லது உடையவர் - பாணம் அல்லது படிகம், கல், மரகதம், உலோகம் ஆகியவற்றில் ஒன்றாலான சிவலிங்கம். க்ஷணிக லிங்கம் - பூசித்தபின் விடப்படுவது. மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா ஆகிய பன்னிரு பொருட்களுள் ஒன்றாலான சிவலிங்கம். விசேடதீட்சை கிரியைக்கும் யோகத்துக்குமுரியது.
விசேட தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே சிவபூசை செய்வதற்கும், சிவயோகப் பயிற்சி செய்வதற்கும் அதிகாரம் உண்டு.

**நிர்வாண தீட்சை**
பந்த பாசம் அனைத்தையும் நீக்கிச் சிவபெருமான் திருவடியை அடையும்படி செய்யும் தீட்சை நிர்வாண தீட்சை ஆகும். இது அசத்தியோ நிர்வாணம், சத்தியோ நிர்வாணம் என இருவகைப்படும்.
அசத்தியோ நிர்வாணம் - தேகாந்தத்தில் முத்தியைப் பயப்பது. சத்தியோ நிர்வாணம் - அப்பொழுதே முத்தி பயப்பதாகும். தீவிர பக்குவருக்கு

அசத்தியோ நிர்வாண தீட்சையும். தீவிரதரபக்குவருக்கு சத்தியோ நிர்வாண தீட்சையும் செய்து வைக்கப்படும்.

நிர்வாணதீட்சை ஞானத்துக்குரியது. தீட்சை பெற்றோர் காலை, மாலை ஆகிய இரு வேளை களிலும் செய்யும் வழிபாடு அநுட்டானம் எனப்படும். அநுட்டானத்திலே மந்திர சுத்தி செய்த திருநீற்றைக் குழைத்து மந்திரஞ் சொல்லி பதினாறு இடங்களிலே பூச உடல் தூய்மையும், வலிமையும் அடையும். திருவைந் தெழுத்தைச் செபம் செய்வதால் மனமும் ஆன்மாவும் தூய்மை யடையும். “சிவாய நம என்று சிந்தித்திருப் போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை” என்பது ஔவையார் வாக்கு.

பாடசாலைகள், சைவசமய நிறுவனங்கள், மன்றங்கள் ஆண்டுக்கொரு முறையேனும் சமய தீட்சையை ஒழுங்கு செய்து நடத்தினால் சைவ ஆசார நெறி பரவுவதுடன் சிவஞான அறிவும், சிவ அநுட்டானப் பொலிவும் பெருக்கிச் சைவம் எனும் பயிர் தானே தழைத் தோங்கும்.

எல்லோரும் தீட்சை பெற்றுத் திருநீறு உருத்திராக்கம் தரித்துத் திருவைந்தெழுத்தைச் செபித்துச் சிவனைப் பூசித்து வழிபட்டுப் பிறவி பெற்ற பயனைப் பெற வேண்டும்.

**ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்**
**நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ**
**சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக்கென்ன வாய்**

- குருஞானசம்பந்தர்

# சமய இலக்கியங்கள்
# வினாடிவினா
# (மாணவர் கல்வி)

**சைவப்புலர் சு. துஸ்யந்த்**

01) காயத்திரி மந்திர உச்சாடனம் பற்றிக் கூறும் வேதம் எது?
**இருக்கு.**

02) இருக்கு வேத தெய்வங்களை அவற்றின் இருப்பிடம் நோக்கி மூன்றாகப் பாகுபடுத்தியவர் யார்?
**யாஸ்கர்.**

03) இருக்கு வேதத்தில் 'அக்ன்யா' என்று போற்றப்பட்ட உயிரினம் எது?
**பசுக்கள்.**

04) "வான்மீகியின் மறு அவதாரம்" என்று புகழப்படுபவர் யார்?
**துளசிதாஸர்.**

05) மகாபாரத இதிகாசத்தை முதன்முதலில் தமிழில் பாடியவர் யார்?
**வில்லிபுத்தூரர்.**

06) மகாபாரத நூலிற்கு "மகாபாரத தாற்பரிய நிருணயம்" என்னும் உரை எழுதியவர் யார்?
**மத்துவர்.**

07) தஸ இலக்கணங்களை மட்டும் கூறும் புராணம் எது?
**பாகவத புராணம்.**

08) மகா புராணங்களில் 'தேவிமகாத்மியம்' என்னும் பகுதியினைக் கொண்டமைந்த புராணம் எது?
**மார்க்கண்டேய புராணம்.**

09) சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியமைக்கு முதல் நூலாக விளங்கியது எது?
**திருத்தொண்டர் தொகை.**

10) மிஷனரிமார்களின் கண்டனங்களை மறுத்து, ஆறுமுக நாவலர் குமரக்கடவுள் மீது எழுதிய நூல் எது?
**சுப்பிரபோதம்.**

11) பஞ்ச பாண்டவர்கள் வைகுண்டத்தை அடையும் காட்சியை பக்தி பூர்வமாகச் சித்தரிக்கும் நூல் எது?
**மாவிந்தம்.**

12) திருமுறைத் தொகுப்பினுள் உள்ளீர்க்கப்பட்ட சங்கப்பாடல் எது?
**திருமுருகாற்றுப்படை.**

13) 'சைவம்' என்ற குறிப்பை முதல் முதலில் தந்த தமிழ் இலக்கியம் எது?
**மணிமேகலை.**

14) சிவாகமங்களுக்கு வழிகாட்டியாக எழுதப்பட்ட நூல்களை எவ்வாறு அழைப்பர்?
**பத்ததிகள் / பதினெண் பத்ததிகள்.**

15) கிறிஸ்தவ சமயம் பரவியமையினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சூழ்நிலையை விளக்கி ஆறுமுகநாவலர் எழுதிய நூல் எது?
**யாழ்ப்பாணச் சமயநிலை.**

## சப்தவிடங்கத்தலங்கள்

சப்த – ஏழு, டங்கம் - உளி, டங்கர் – உளியால் செதுக்கப்பட்டவர், விடங்கர் - உளியால் செதுக்கப்படாதவர் சுயம்பு மூர்த்தி

| | தலம் | மூர்த்தி | நடனம் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | வீதிவிடங்கர் | அசபா நடனம் |
| 2. | திருக்கோளிலி | அவனிவிடங்கர் | பிரமர நடனம் |
| 3. | திருநள்ளாறு | நகவிடங்கர் | உன்மத்த நடனம் |
| 4. | நாகபட்டினம் | சுந்தரவிடங்கர் | பராவாரதரங்க நடனம் |
| 5. | திருமறைக்காடு | புவனிவிடங்கர் | ஹம்ச நடனம் |
| 6. | திருவாய்மூர் | நீலவிடங்கர் | கமல நடனம் |
| 7. | திருக்காறாயில் | ஆதிவிடங்கர் | குக்குட நடனம் |

சென்ற இதழின் தொடர்ச்சி.........

# இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை

**திருமுறைநெறிச்செல்வர்**
**திருமதி. கேசினி கோணேஸ்வரன்**

## திருவாரூர்

2012.01.29 அதிகாலை எழுந்து திருவாரூர் கோயிலுக்குச் சென்றோம். இங்குள்ள இறைவன் பெயர் - வான்மீகநாதர், புற்றிடங் கொண்டார். இறைவி - அல்லியங்கோதை, தலவிருட்சம் - சிவப்பு பாதிரி, தீர்த்தம் - கமலாலய தீர்த்தம், இது பிறக்க முக்திதரும் தலம். சப்த விடங்கத் தலங்களில் மூலாதாரத்தலம். பஞ்சபூதத் தலங்களில் பிருத்வி தலம். மணிமுத்தா நதியில் இட்ட பொன்னை சுந்தரர் இங்கு கமலாலயக்குளத்தில் எடுத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி வலதுகண் பார்வை பெற்ற தலம்.

விறன்மிண்ட நாயனார், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்க நாயனார் வழிபட்டு முத்தி பெற்றதலம். தியாகராஜர் பெருஞ்சிறப்புடன் அஜபாநடன மூர்த்தியாகத் திகழும் தலம். இங்குள்ள தேர் சிறப்புவாய்ந்தது. திருவாரூர்த் தேர் அழகு என்பது குறிப்பிடத்தக்கது. தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருக்கும் இடம் இன்று தேவாசிரிய மண்டபம் என அழைக்கப்படுகின்றது. இங்குதான் சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாடியுள்ளார்.

இங்குள்ள நவக்கிரகங்கள், சிவலிங்கத்தை அடுத்து ஒரே வரிசை யில் அமைந்துள்ளன. இவை சிவனுக்குக்கட்டுப்பட்டு தங்களின் வக்கிரத்தைக் குறைத்து பக்தர்களுக்கு அருளும் அனுக்கிரக மூர்த்திகளாக உள்ளனர். பக்தரின் நோயைக் குணப்படுத்தும் மூர்த்தியாக குணவிமோசனர் உள்ளார். அமாவாசை தினத்தன்று உப்பு, மிளகு காணிக்கை செய்யும் பக்தர்களுக்கு தங்களுக்கு தீராத நோய்களையும் நெடுநாள் தீராத வராத கடன்களையும் தீர்த்து வைக்கிறார். 1000 சிவலிங்கங்களைத் தன்னகத்தே கொண்ட சகஸ்ர லிங்கம் உண்டு.

இரு சண்டேஸ்வரர்கள் இருப்பது சிறப்பம்சம். திருவாரூரில் பிறப்பவர் கள் எல்லாரும் சிவகணங்களாக முத்தியடைவதால் இங்கு எமனுக்கு வேலையில்லை இதனால் இறைவன் எமனுக்கும் இங்கு சண்டேஸ்வர பதவியை வழங்கினார். ஆதி சண்டேஸ்வரர், எமசண் டேஸ்வரர் என இருவர் உள்ளனர். எல்லாத்தலங்களிலும் சிவனின் முன் நந்தி அமர்ந்திருப்பார். ஆனால் இங்கு மட்டும் நந்தி எழுந்து நின்றவண்ணமுள்ளது. வீதிவிடங்க விநாயகர் விமானத்தில் மனுநீதி கண்ட சோழன் சிற்பம் தத்துரூபமாக உள்ளது. மனுநீதிச் சோழனின் நினைவுச் சின்னமாக இன்றும் கல்தேர் உள்ளது.

திருவாரூர்க் கோயிலில் மாலை கட்டும் இடம் பள்ளித்தாம மண்ட பம் என அழைக்கப்படும். நமிநந்தியடிகள் நீரால் விளக்கேற்றிய இடம் அரலேஸ்வரர் சந்நிதி. திருவாரூர் பழைய தேரின் தேர்ச்சில்லு களை இப்போதும் காணலாம். ஓர் ஆளின் உயரத்திற்கும் கூடிய உயரம் உடையவை. திருநாவுக்கரசு நாயனார் பல பதிகங்களில் ஆரூர்ப்பெருமனைப் பாடியுள்ளார். 1ம் திருமுறையிலிருந்து 12ம் திருமுறைவரை எல்லாத் திருமுறைகளிலும் திருவாரூர்ப் பெருமானைப் பற்றிய பாடல்கள் உள்ளன. பங்குனி உத்தரம், மார்கழித் திருவாதிரை, தெப்பத்திருவிழா போன்ற உற்சவங்கள் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

திருமால் சோமஸ்கந்த மூர்த்தமாக இறைவன், இறைவி, முருகனை தன் நெஞ்சக்கோயிலில் இருத்தி வழிபாட்டாற்றுகிறார். அங்குள்ள பெருமானும் திருமாலின் உட்சுவாச, வெளிச்சுவாச அசைவால் அஜவா நடனம் ஆடிக்கொண்டிருக்கிறார். திருவாரூர் தரிசனம் செய்த மனநிறைவோடு திருநள்ளாறு நோக்கிப் பயணமானோம்.

**திருநள்ளாறு**

திருநள்ளாறு ஸப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. இங்கு இறைவன் உன்மத்த நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார். இங்குள்ள இறைவன் தர்ப்பாரண்ஜேஸ்வரர், இறைவி - போகமார்ந்த பூன்முலையாள், தலவிருட்சம் - தர்ப்பைப்புல், தீர்த்தம் - நளதீர்த்தம், பிரம தீர்த்தம், வாணி தீர்த்தம், கங்கா தீர்த்தம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் பழைமைவாய்ந்த கோயில்.

தேவார முதலிகள் மூவராலும் பாடப்பட்ட தலம். அப்பர் 02 பதிகங் களும், சம்பந்தர் 04 பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள் ளனர். மூலவர் தர்ப்பையில் முளைத்த சுயம்பு மூர்த்தி. சிவலிங்கத் தின் மீது முளைத்த தழும்பு உள்ளது. இங்கு நந்தியும் பலிபீடமும் சுவாமிக்கு எதிரே இல்லாமல் சற்றே ஒதுங்கியுள்ளன. திருமால், பிரமன், இந்திரன், அட்டதிக்குப்பாலகர், அகத்தியர், புலஸ்தியர், அர்ச்சுனன், நளன் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

இங்கு சனிபகவான் சன்னிதி மிகவும் பிரசித்தி பெற்றது. சனிதோச நிவர்த்தி, பரிகாரம் முதலியவை பக்தர்கள் நிறைவேற்றிக் கொள் கிறார்கள். சனிப்பெயர்ச்சிக் காலங்களில் சனீஸ்வரன் தங்க காக வாகனத்தில், தங்கக்கவசம் அணிந்து பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோயிலில் 63 நாயன்மார்கள் சந்நிதி, நளன் சன்னிதி என்பன உண்டு. ஆறுகாலப் பூசை நடக்கிறது. இங்கு வைகாசிமாத உத்தரட்டாதி தினத்தில் கொடி ஏறிப் பதினெட்டுநாள் பெருவிழா நடைபெறும். திருநள்ளாற்றைத் தரிசித்தபின் திருக்கடலூர் நோக்கிப் பயணமானோம்.

தொடரும்............

பெரியபுராணத் தொடர் ..........

# சுந்தர மூர்த்தி நாயனார் புராணம்

சித்தாந்தரத்தினம்
திருமதி. பத்மினி இராஜேந்திரா

பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு சோழமண்டலத்தையடைந்த சுந்தரர் பெருமான் திருவாவடுதுறையை அணுகும்போது அடியார்கள் அவரை எதிர்கொண்டு அழைத்தார்கள். திருவாவடுதுறையில் இருக்கும் போது சுந்தரப் பெருமானுக்கு மேனியில் புகர்நோய் தோன்றி வருத்தியது. கண்நோயுடன் உடல்நோயும் தொடர்ந்து வருத்துதலால் உற்ற கலக்கத்தை, ''கங்கைவார்சடையாய்'' என்னும் பதிகத்தின் வாயிலாக மாசிலாமணி ஈசர் திருவடிகளில் விண்ணப் பித்து இறைஞ்சினார்.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டுத் திருத்துருத்தியை அடைந்தார் சுந்தரப் பெருமான். அங்கு விளங்கும் இறைவனைப் படிந்து தமக்குற்ற நற்பிணியை நீக்கியருள வேண்டும் என வேண்டினார். திருத்துருத்தி இறைவன் சுந்தரரை நோக்கி, ''நீ இந்த திருக் கோயிலின்பால் உள்ள திருக்குளத்தில் குளிப்பாயாக'' எனப் பணித்தருளினார். சுந்தரரும் அவ்வாறே அத்தீர்த்தத்துள் முழ்கினார் நோய் நீங்கி ஒளிதிகழும் திருமேனியுடன் எழுந்து திருக்கோயிலை வலம்வந்து, ''மின்னுமா மேகங்கள்'' எனவரும் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

அடியார்களுடன் திருத்துருத்தியினின்றும் புறப்பட்டு பல தலங்களை யும் பணிந்து ஒருநாள் மாலைப் பொழுதில் திருவாரூரை அணுகினார். அங்கு பரவையுண்மண்டளி என்னும் திருக்கோயிலை அடைந்து இறைவனைத்தொழுது ''தூவாய'' என்னும் திருப்பதிகம் பாடிப் பரவித் தமக்குக் கண்ணைத் தந்தருளும்படி வேண்டினார். பின்பு அர்த்தயாமத்திலே திருவாரூர் திருமூலட்டானத்து இறைவனை வழிபட்டு ''குருகுபாயக்கொழு'' என்னும் திருப்பதிகம் பாடிக்கொண்டு தேவாசிரிய மண்டபத்தை நமஸ்கரித்து, கோபுரத்தையும் வணங்கி உள்ளே புகுந்து சுவாமி சன்னிதானத்தில் வீழ்ந்து வணங்கி, சுவாமியைத் தரிசிப்பதற்கு ஒரு கண் போதாமையினால் அதிக துக்கங்கொண்டு ''சுவாமி அடியேனுக்கு வலக்கண்ணையும் தந்த ருளவும்'' என வேண்டி ''மீளாஅடிமை உமக்கே'' என வரும் பதிகம் பாடிப் போற்றினார். உள்ளத்தை உருக்கவல்ல இத்திருப்பதிகத்தைச் செவிமடுத்த திருவாரூர்ப் பெருமான் திருவுளம் இரங்கிச் சுந்தரருக்கு வலக்கண்ணையும் கொடுத்தருளினார்.

உடனே சுந்தரர் பரவசமடைந்து ஆடியும், பாடியும், ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தி வான்மீகநாதருடைய திருக்கோலத்தை இரண்டு கண்களினாலும் தரிசனம் செய்து வணங்கி, தேவாசிரிய மடத்தில் தங்கியிருந்தார்.

திருவொற்றியூரில் சங்கிலியாரைச் சுந்தரர் மணந்துகொண்ட நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பரவையார் சினங்கொண்டிருந்தமையால் சுந்தரரில் பரிசனங்கள் பரவையார் மாளிகைக்குள் நுழையப்பெறாது மீண்டும் தேவாசிரியன் மண்டபத்தை அடைந்தனர். அம்மண்டபத்தில் இருந்த சுந்தரரை இறைஞ்சி நின்று அவர்கள் மாளிகைப்புறத்திலும் செல்லவொண்ணாதபடி தடுக்கப்பட்டு திருப்பிவிட்ட செய்தியைக் கூறினார்கள்.

அந்நிலையில் சுந்தரர் பெரிதும் கலக்கமடைந்து நெடிது நிறைந்து பெரியவர்கள். இங்ஙனம் தம் அன்புப் பரவையாரை அணுகப்பெறாது துன்புற்று, வருந்தும் சுந்தரர் எல்லோரும் அயர்ந்து துயிலும் நள்ளிரவிலே தம் தோழர் ஆகிய வீதிவிடங்கப்பெருமான் திருபுகழை நினைந்து போற்றி பரவையாரின் ஊடலைத் தணித்தருளும் பொருட்டு உளம்கசிந்து வேண்டினார். அப்போதே அருளே திருமேனியாகக் கொண்டு ஆரூர்ப்பெருமான் எழுந்தருளிச் சுந்தர ரிடம் உனது துயரம் யாது? என வினாவினார். ஆருரிறைவரைக் கண்ட சுந்தரர், அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, “எம்பிரானாகிய உமது திருவருளால் அடியேன் சங்கிலியை மணந்த செய்தியைப் பரவை கேள்வியுற்று, அவளிடம் நான் சென்றால் தான் பிராணத்தியாகம் பண்ணுதல் தவறாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சிறியேன்படும் துன்பத்தைப் பார்த்துத் தேவரீரே இவ்விரலில் பரவை வீட்டிற்குசென்று அவருடைய ஊடலைத் தீர்த்தருளல் வேண்டும்.” என்று விண்ணப்பஞ் செய்தார்.

அதனைக் கேட்ட இறைவன் “தோழனே நான் இப்பொழுதே உனக்கு ஒரு தூதனாகிப் பரவை வீட்டிற்குப் போகிறேன். நீ உன் துன்பத்தை ஒழி” எனத் திருவாய் மலர்ந்தார். உடன் சென்ற சிவகணங்களைப் புறத்தே நிறுத்தித் தமக்கு வழிபாடு செய்யும் மறைமுனிவர் வடிவுடன் தனித்தே உள்ளே சென்று, “பரவையே கதவைத்திறந்திடுக” எனக் கதவினைத் தட்டியழைத்தார், ஆரூரிறைவன்.

தொடரும் ......

# சேர் பொன்னம்பலம் இராமநாதனின் சமயப் பணிகள்

சித்தாந்தரத்தினம்
திருமதி. கலைவாணி இரத்தினசோதி

சேர் பொன். இராமநாதன் சைவத்தமிழுலகில் தலைசிறந்த பெரியார் வரிசையில் ஒருவராவார். இவர் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் (கேற் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வனாக கொழும்பில் 16.04.1851இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு இராணிக் கல்விக்கழகத்தில் கற்றார். தனது 13வது வயதில் சென்னைக்குச் சென்று பிரசிடென்சி கல்லூரியில் சட்டக்கல்வி பயின்றார். மிகுந்த சொல்வன்மையும் வாதத்திறமையும் வாய்க்கப்பெற்ற இவர். பிரித்தானியர்களினால் 1897ஆம் ஆண்டு இலங்கையில் முழுமையான தேசியவாதி என்னும் தங்கப்பதக்கமும் 1921ஆம் ஆண்டு பிரபுப்பட்டமும்(Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் அரசியல் மூலம் மக்களுக்கு செய்த தொண்டுகள் தவிர சமய சமூகத்துறைகளிலும் சேவை செய்துள்ளார். நாம் இக்கட்டுரையில் அவர் செய்த சமயப்பணிகளை நோக்குவோம்.

அருள்பரானந்த சுவாமிகளின் தொடர்பால் சமயம், தத்துவம், யோகநெறி என்பவற்றைத் தெளிவாக கற்றுணர்ந்த இவர் கீழைத்தேய மெய்யியல் தூதுவராக 1905 - 1906 இலே அமெரிக்கா சென்று சொற்பொழிவாற்றினார். 1906ஆம் ஆண்டு சைவசித்தாந்த மகாசஜாமத்தில் முதல் மாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

இவருடைய தந்தையார் திரு பொன்னம்பலம் முதலியார் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் போது கொழும்புவாழ்தமிழ் மக்களுக்கு ஒரு சிவாலயம் நிறுவப்பட வேண்டும் என விரும்பி, 1856ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி சைவஆகம விதிப்படி ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் கோயிலைக் கட்டி 1857ஆம் ஆண்டு குடமுழுக்கும் செய்து வைத்தார்.

காலம் சென்ற பொன்னம்பலம் முதலியார் அவர்களால் நிறை வேற்றப்பட்ட நம்பிக்கைச் சொத்து உறுதியின்படி கோயில் நிர்வாக கடமைகள் அவரது பரம்பரையில் தோன்றும் முதல் ஆண் வாரிசுக்கே வழங்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

இதன்படி 1887ஆம் ஆண்டு பொன்னம்பலம் முதலியாரது மறைவிற்கு பின் ஆலய நிர்மாணப்பணி அவரது மூத்த புதல்வரான காலஞ்சென்ற முதலியார் குமாரசுவாமியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயினும் 1905ஆம் ஆண்டு

குமாரசுவாமி முதலியாருடைய மறைவை அடுத்து அவரது சகோதரரான பொன்னம்பலம் இராமநாதன் இக்கோயிலின் நிர்வாகப் பணிக்கு சட்டபூர்வமான வாரிசானார். தன் தந்தையார் மற்றும் சகோதரர் ஆகியோர் விட்டுச் சென்ற ஆலயப்பணி இவரால் முன்னெடுக்கப்பட்டது.

உயர்ந்தநோக்கு, கடமையுணர்வு, ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகிய சீரிய குணங்களைக் கொண்ட சேர் பொன் இராமநாதன் ஆலய அறங்காவலராக செயலாற்றியதோடு ஆலயத்தின் பொதுச் சொத்தானது கட்டுக்கோப்பான முறையில் கையாளப்பட வேண்டும் என்பதில் கண்டிப்பு மிக்கவராக விளங்கினார்.

ஆரம்பத்தில் இத்திருத்தலமானது வெறுமனே செங்கற்களாலும் சூழைச் சுண்ணாம்புக் கலவையினால் மட்டுமே கட்டப்பட்டிருந்தது. அன்னாரின் பெரும்முயற்சியால் கருங்கற்கள் புனர் நிர்மாணப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டன. கோயில் கட்டிட அமைப்பானது மிகச்சிறப்பாக அமைய வேண்டும் என்ற சீரிய நோக்கில் தென்னிந்தியாவிற்கு பயணத்தை மேற்கொண்டு அங்கிருந்து கட்டிட மற்றும் சிற்பக்கலைஞர்களை வரவழைத்து இக்கோயிலின் நிர்மாணப் பணிக்கு அமர்த்தினார். 1907ஆம் ஆண்டு ஆரம்பித்த புனர்நிர்மாணப்பணியானது. ஏறத்தாழ 1912ஆம் ஆண்டளவில் பூர்த்தியடைந்ததை அடுத்து 1912ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேலும் ஆலயப்பணியில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்ட கோயில் அர்ச்சகர்கள் கோயில் தொண்டர்கள் மற்றும் கோயில் பணியாளர் கள் தங்குவதற்கென தனி வதிவிடமும் அமைத்துக் கொடுத்தார்.

எவ்வாறாயினும் பண்டைய மன்னர் ஆட்சிக்காலத்தில் எழுந்த ஆலயங்களுடன் ஒப்புநோக்குகையில் இவரது பணி அளப்பரியது ஆகும். காரணம் பண்டைய மன்னர் ஆட்சியில் கட்டப்பட்ட ஏராள மான கோயில்கள் முற்றுமுழுதாக அரச அனுசரணையுடனும், அரச பொருளாதார பலத்தின் காரணமாகவும், ஏராளம் மனித வளத்துட னும் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப்பணிகள் ஆகும். ஆயினும் சேர் பொன் இராமநாதன் அவர்கள் ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் கோயிலை தன் சொந்த முயற்சியினால் மட்டுமே நிர்மாணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1923ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சைவவித்தியா விருத்திச் சங்கம் தோன்றுவதற்கு காரணமாக இருந்ததோடு அதன் முதற்தலைவராகவும் பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்திலே திருநெல்வேலியிலே ஆண் பிள்ளைகளுக்காக பரமேஸ்வரா கல்லூரியையும் பரமேஸ்வரா ஆலயத்தையும் அமைத்தார். இணுவில் கிராமத்திலே 25 ஏக்கர் காணியை வாங்கி பெண்களுக்கென

இராமநாதன் கல்லூரியை 1913இல் நிறுவினார். தமிழர்களின் பண்பாட்டினை பிரகாசிக்கும் வகையில் மாணவரது செயற்பாடு அமைய வேண்டும் என விரும்பி இக்கல்லூரியின் வடமேற்திசையில் தனக்கென ஒரு மனை அமைத்து அறவாழ்வினை மேற்கொண்டார்.

தன்னுடைய சமாதியை அச்சூழலிலே அமைக்க வேண்டும் என்ற நோக்கிலே அதேயிடத்தில் ஒரு ஆலயம் அமைக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். இவருடைய மருமகன் சு. நடேசபிள்ளை இக்கனவினை நனவாக்கி வைத்தார். இவரது உருவச்சிலை கொழும்பில் அமைக்கப்பட்ட போதிலும், இவர் வாழ்ந்த இடமான இராமனாதன் கல்லூரி முன்றலிலும் ஒரு முழு உருவச்சிலை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1938 – 1940 காலப்பகுதியில் இவர் சமாதியடைந்த இடத்தில் இராமநாதேஸ்வரன் கோயில் இந்திய சிற்பக்கலை மரபினை ஒட்டி இந்தியக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டு கருங்கற்களால் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடரும் ......................

## சிவபெருமான் நடமிடும் பஞ்ச சபைகள்

1) திருவாலங்காடு - இரத்தினசபை
2) சிதம்பரம் - பொற்சபை
3) மதுரை - வெள்ளிச்சபை
4) நெல்லை - தாமிரசபை
5) குற்றாலம் - சித்திரசபை

சென்ற இதழின் தொடர்ச்சி.........

# வாரியாரின் ஒரு வரிப் பதில்

81. இவ்வுலகில் பரிதாபப்படத்தக்கவன் எவன்?
**பொருளிருந்தும் அடுத்தவருக்குக் கொடுக்காதவன்.**
82. இகழ்ச்சிக்குக் காரணம் எது?
**தன்னிலும் தாழ்ந்தவர்களிடத்தில் யாசிப்பது.**
83. ஸ்ரீராமனைவிடச் சூரன்யார்?
**மன்மத பாணங்களால் அடிபட்டும் தன்னிலையில் இருப்பவன்.**
84. விஷம் எங்கிருக்கிறது?
**துஷ்ட ஜனங்களிடத்தில்.**
85. முக்கியமான தீர்த்தம் எது?
**மன அழுக்கை நீக்குவது எதுவோ அது.**
86. மனிதர்களால் நினைக்கத்தக்கது எது?
**இறைவனின் திருநாமம்.**
87. நல்லபுத்தியுடைவனால் சொல்லத்தகாதது எது?
**பிறரது குற்றம்.**
88. மனிதர்களால் சம்பாதிக்கப்பட்டது எது?
**கல்வி, செல்வம், வலிமை, புகழ், புண்ணியம்.**
89. சகல குணங்களையும் அழிப்பது எது?
**பிறர்க்கு உதவாத கருமித்தனம்.**
90. தீராப் பகைவன் யார்?
**காமம்.**
91. எந்தச்சபையை விட்டு விலக வேண்டும்?
**ஆன்றோர்கள் இல்லாத சபையை விட்டு.**
92. மனிதன் எவ்விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்?
**எஜமானுக்குச் சேவை செய்வதில்.**
93. உயிரைவிடப் பிரியமானது எது?
**குலதர்மமும், நல்லோரின் சேர்க்கையும்.**
94. காப்பாற்றத் தக்கவை எவை?
**கீர்த்தியும், கற்பும், சுயபுத்தியும்.**
95. அழிவற்ற ஆலமரம் (அட்சய வடம்) போன்றது எது?
**விதிப்படி சத்பாத்திரத்தில் கொடுக்கப்படும் தானம்.**
96. எந்த ஆயுதம் எல்லாருடைய கையிலும் உள்ளது?
**யுக்தி** (நியாயபூர்வமாக நிரூபிக்கப்படக் கூடிய சக்தி)
97. எல்லாருக்கும் தாயார் யார்?
**பசு.** (தன்குழந்தைகளுக்குப் பால் கொடுத்துவிட்டு ஊருக்கும் பால் கொடுக்கும் தாய் பசு.)
98. எது சேனை?
**தைரியம்.**
99. எது எமன்?
**கவனமில்லாதிருத்தல்.**
100. முதல்தரமான தீட்டு எது?
**கடன்காரன்.** (கடன்காரனுக்கு மனிதன் ஒளிவதுபோல், வேறு எதற்கும் ஒளிவதில்லை)

தொடரும் ......

# நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்

ஜய ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01 | 18.10.2014 | சனி | மாதப்பிறப்பு |
| 02 | 19.10.2014 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 04 | 21.10.2014 | செவ்வாய் | பிரதோஷ விரதம்,<br>நரக சதுர்த்தி |
| 05 | 22.10.2014 | புதன் | தீபாவளி |
| 06 | 23.10.2014 | வியாழன் | அமாவாசை விரதம்<br>கேதாரகௌரி விரதம் |
| 07 | 24.10.2014 | வெள்ளி | கந்தசஷ்டி விரத ஆரம்பம்<br>மெய்கண்டதேவர் குருபூசை |
| 10 | 27.10.2014 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| 11 | 28.10.2014 | செவ்வாய் | ஸ்கந்தபஞ்சமி<br>ஐயடிகள் காடவர்கோன் குருபூசை |
| 12 | 29.10.2014 | புதன் | கந்தசஷ்டி விரதம் |
| 17 | 03.11.2014 | திங்கள் | உத்தான ஏகாதசி விரதம் |
| 18 | 04.11.2014 | செவ்வாய் | பிரதோசம் |
| 20 | 06.11.2014 | வியாழன் | பூரணை<br>அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்<br>திருமூலர் குருபூசை |
| 21 | 07.11.2014 | வெள்ளி | ஐப்பசிப்பரணி கார்த்திகை விரதம்<br>நெடுமாற நாயனார் குருபூசை |
| 22 | 08.11.2014 | சனி | இடங்கழி நாயனார் குருபூசை |
| 24 | 10.11.2014 | திங்கள் | சங்கடகர சதுர்த்தி விரதம் |
| 27 | 13.11.2014 | வியாழன் | சத்தி நாயனார் குருபூசை |

ஜய கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.11.2014 | திங்கள் | மாதப்பிறப்பு |
| 02 | 18.11.2014 | செவ்வாய் | ஏகாதசி விரதம்<br>ஆனாய நாயனார் குருபூசை |
| 04 | 20.11.2014 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 06 | 22.11.2014 | சனி | அமாவாசை விரதம் |

| | | | |
|---|---|---|---|
| 08 | 24.11.2014 | திங்கள் | மூர்க்க நாயனார் குருபூசை |
| 09 | 25.11.2014 | செவ்வாய் | சிறப்புலி நாயனார் குருபூசை |
| 10 | 26.11.2014 | புதன் | சதுர்த்தி விரதம் |
| 11 | 27.11.2014 | வியாழன் | சஷ்டி விரதம் |
| 16 | 02.12.2014 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| 18 | 04.12.2014 | வியாழன் | பிரதோச விரதம் |
| 19 | 05.12.2014 | வெள்ளி | திருக்கார்த்திகை, சர்வாலய தீபம்<br>கணம்புல்ல நாயனார் குருபூசை |
| 20 | 06.12.2014 | சனி | பூரணை விரதம்<br>அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் |
| 21 | 07.12.2014 | ஞாயிறு | விநாயக விரதாரம்பம் |
| 24 | 10.12.2014 | புதன் | சங்கடகர சதுர்த்தி விரதம் |
| 26 | 12.12.2014 | வெள்ளி | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை |
| 29 | 15.12.2014 | திங்கள் | மெய்ப்பொருள் நாயனார் குருபூசை |

ஜய மார்கழி

| | | | |
|---|---|---|---|
| 01 | 16.12.2014 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| 03 | 18.12.2014 | வியாழன் | ஏகாதசி விரதம் |
| 04 | 19.12.2014 | வெள்ளி | பிரதோச விரதம் |
| 06 | 21.12.2014 | ஞாயிறு | அமாவாசை விரதம் |
| 08 | 23.12.2014 | செவ்வாய் | சாக்கிய நாயனார் குருபூசை |
| 10 | 25.12.2014 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 12 | 27.12.2014 | சனி | விநாயக சஷ்டி,<br>23ஆவது குருமூர்த்திகள் குருபூசை<br>திருவெம்பாவை ஆரம்பம் |
| 14 | 29.12.2014 | திங்கள் | வாயிலார் நாயனார் குருபூசை |
| 17 | 01.01.2015 | வியாழன் | சுவர்க்கவாயில் ஏகாதசி, கார்த்திகை விரதம் |
| 18 | 02.01.2015 | வெள்ளி | பிரதோச விரதம் |
| 20 | 04.01.2015 | ஞாயிறு | பூரணை விரதம்<br>சடையனார் நாயனார் குருபூசை |
| 21 | 05.01.2015 | திங்கள் | நடேசர் ஆருத்திரா தரிசனம் |
| 24 | 08.01.2015 | வியாழன் | சங்கடகர சதுர்த்தி |
| 27 | 11.01.2015 | ஞாயிறு | இயற்பகை நாயனார் குருபூசை |
| 30 | 14.01.2015 | புதன் | மானக்கஞ்சாற நாயனார் குருபூசை |

# உங்களுக்குத் தெரியுமா!
# ஒன்பது வினாக்களுக்கு ஒன்றே பதில்

சித்தாந்தரத்தினம்
பத்மினி ராஜேந்திரா

1. ‘வேதம் நானே’ என்று சிவபெருமான், திருமாலுக்கு உபதேசம் செய்த தலம் எது?
2. திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் அவதரித்த ஊரின் பெயர் என்ன?
3. மாண்டவ்ய முனிவரின் சாபத்தினால் முடமான சனீஸ்வரன், சாபநீக்கம் பெற்ற கோயில் எது?
4. வாயுதேவனின் புத்திரனாக ஆஞ்சநேயர் அவதாரம் செய்வதற்குக் காரணமாக இருந்த ஆலயம் எது?
5. பிருகு முனிவரின் கோபத்தினால் தன் தன்மையை இழந்த அக்னி, மீண்டும் தன்நிலை பெற்ற ஊர் எது?
6. ஆணவத்தால் இழந்த வாகனத்தை பைரவர் மீண்டும் பெற்றது எது?
7. பாண்டவர்களின் ராஜசூய வேள்விக்குத் துணைபுரிந்து, பின் காவல் தெய்வமாக திருமாலால் ஸ்தாபிக்கப்பட்ட புருஷாமிருகம் எவ்விடத்தில் உள்ளது?
8. மதுரையில் சங்கம் அமைத்த புலவர்களில் பொய்யடிமை இல்லாதபுலவர் என்று பாராட்டப்பெற்ற கபிலர் பிறந்த ஊர் எது?
9. பிரம்மாவின் வேள்வியில் தோன்றிய உமை, ஆரணவல்லித் தாயார் என்ற பெயரில் அருள்பாலிக்கும் புண்ணிய பூமி எது என்று உங்களுக்கு தெரியுமா?

இந்த 9 கேள்விகளுக்கும் ஒரே பதில்

## திருவாதவூர்

# சிட்னி முருகன் சைவநெறி மாநாட்டு
# நிகழ்வுகள்














# சிட்னி முருகன் சைவநெறி மாநாட்டு நிகழ்வுகள்










Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/167/News/2014
இவ்விதழ் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையம் கொழும்பினரால்
Sharp Graphics (Pvt) Ltd. அச்சிட்டு வெளியிடப்பட்டது.